# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 62
விலை ரூபாய் 30.00

தீபம்–62 | ஐப்பசி இதழ் – 2019,
ஆரம்பம் 15 மாசி - 2013



திருமறைக்கல்வி நிலையம்,
இல: 297, கடற்படைத்தள வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 2221022, 026 2054362


நன்மை செய்யும் அனைவருக்குமே பெருமையும் மாண்பும் அமைதியும் கிடைக்கும் (உரோ 2:10)

## மறைமாநில ஆயரின் செய்தி



அன்புள்ள சகோதர சகோதரிகளே,
கிறிஸ்து இயேசுவில் என் இனிய வாழ்த்துக்கள்.

திருமலை தீபம் பத்திரிகை மூலமாக பல விடயங்களைக் கற்றுக்கொள்ளவும், அறிந்து கொள்ளவும் முடிவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். எமது திருகோணமலை மறை மாவட்டத்தில் ஆன்மீகம், கல்வி, சமூகப்பணி போன்ற முன்னெடுப்புக்களும் செயல்பாடுகளும் தொடர்கின்றன.

ஏப்ரல் மாதம் நடைபெற்ற அனர்த்தத்திற்குப்பின் எமது செயல் காடுகள் பல ஸ்தம்பிதம் அடைந்தாலும் மீண்டும் நாம் பழைய நிலைக்கு வந்து எமது வளர்ச்சியில் பங்கேற்கின்றோம்.

எமது அழைப்பையும் ஆண்டவரது கடைசிக்கால பணிப்பையும் புதிய உத்வேகத்தோடு செயல்படுத்த எமது திருத்தந்தை பிரான்சிஸ் ஒக்டோபர் மாதத்தை 'மறைபரப்பிற்கான விசேட மாதமாக' பிரகடனப்படுத்தியுள்ளார். இப்பொறுப்பை உலகெங்கும் செயல்படும் பாப்பிறை மறைபரப்புச் சபைகளின் கத்தோலிக்க ஆணைக்குழுக்கள் முன்னெடுத்துச் செயல்படுத்துகின்றன.

'திருமுழுக்குப் பெற்று அனுப்பப்படுகிறீர்கள்' (Baptised and Sent) எனும் தலைப்பை மையமாகக் கொண்டு அனைத்து செயல்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. மறைந்த திருத்தந்தை 15ம் பெனடிக்ட் 1919ம் ஆண்டு Maximum Illud எனும் திருத்தூது மடல் மூலமாக திருச்சபையில் நற்செய்தி அறிவிப்புப்பணி புதுப்பொலிவுடன் செயல்படுத்தப்பட வேண்டும் என அழைப்பு விடுத்தார்.

இதன் 100 வருட நிறைவில் திருத்தந்தை பிரான்சிஸ் மீண்டும் இதுபோன்ற அழைப்பை விடுத்துள்ளார். இவ்வருடம் ஒக்டோபர் மாதத்தை 'மறைபரப்பிற்கான விசேட மாதம்' என்று திருத்தந்தை பிரகடனம் செய்துள்ளார். இதற்கு திருஅவையில் அனைத்து நிலையில் உள்ளவர்களும் சாதகமாக செயல்படத் தொடங்கினர். பாப்பிறை மறைபரப்புச் சபைகளில் நெருங்கி செயல்படும் குருக்கள், துறவியர், பொதுநிலை ஊக்குவிப்பாளர்களுக்கான ஆயத்தக் கருத்தரங்குகள் தேசிய இயக்குனர் அருட்தந்தை பசில் றொகான் அடிகள் தலைமையில் நடைபெற்றன.

சென்று போதியுங்கள் என்பது நமதாண்டவர் இயேசுவின் கட்டளை. திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் இது பொருந்தும். இக்கட்டளை திருஅவை சரித்திரத்தில் பல வடிவங்களில் செயல்படுத்தப்பட்டது. இன்று இது பற்றி ஆழமாக சிந்திக்கவும் திட்டமிட்டு செயல்படவும் நாம் அழைக்கப்படுகின்றோம். இவற்றை ஒக்டோபர் மாதம் செயல்படுத்த பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எமது செயல்பாடுகளை நாம் நான்கு மையப்பொருளில் நடைமுறைப்படுத்துவோம். அவை செபம், சான்று, பயிற்சி, நற்செயல்கள் ஆகும். எனவே நற்செய்தி அறிவிப்பிற்கான சிறப்பு ஒக்டோபர் மாதத்தை எவ்வாறு நாம் பயன்படுத்தப்போகின்றோம்?

- ✠ 'நீங்கள் திருமுழுக்குப் பெற்று அனுப்பப்படுகின்றீர்கள்' எனும் தலைப்பில் பதாதைகள் அச்சிடப்பட்டுள்ளன. இவை அனைத்து ஆலயங்களிலும், கத்தோலிக்க நிறுவனங்களிலும், துறவற இல்லங்களிலும் காட்சிப் படுத்தப்பட வேண்டும்.
- ✠ செபம், சான்று, பயிற்சி, நற்செயல்கள் எனும் நான்கு மையப்பொருள் பற்றிய அறிவை கத்தோலிக்க விசுவாசிகளுக்கு மறையுரைகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் மூலமாக புகட்ட வேண்டும்.
- ✠ தேவையில் இருப்போர், மற்றும் பல காரணங்களால் திருஅவையை விட்டு பிரிந்திருப்போர் இவர்கள் பற்றிய எமது கரிசனையும் கவனமும் உருவாக்கல்.

தொடர்ச்சி 03ம் பக்கத்தில்......

## சாம்பல்தீவு புனித திருமுழுக்கு யோவான் ஆலய வருடாந்த திருவிழா நிகழ்வுகள் - 2019





எமது ஆலய திருவிழாவை முன்னிட்டு 30.08.2019 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு பங்குத்தந்தை அருட்பணி இ. யூட் சர்வானந்தன் அடிகளாரால் கொடியேற்றப்பட்டு தினமும் மாலை 5.00 மணிக்கு திருச்செபமாலையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப் பட்டது. 07.09.2019 காலை 7.15 மணிக்கு திவ்விய நற்கருணை, உறுதிப்பூசுதல் பெற இருந்தவர்களுக்கான அருட்சாதன திருப்பலி எமது மறைமாநில ஆயர் பேரருட்திரு கலாநிதி கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகையால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. 49 சிறார்கள் அருட்சாதனங்களைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆன்றைய தினம் மாலை நன்றி வழிபாட்டைத் தொடர்ந்து புனிதரின் திருச்சுரூப பவனியும் இடம்பெற்றது.

திருவிழா திருப்பலி 08.09.2019 காலை 7.15 மணிக்கு எமது மறைமாநில குருமுதல்வரும் எமது மண்ணின் மைந்தனுமான அருட்பணி T. கிங்ஸ்லி றொபட் அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப் பட்டது. அன்றைய தினம் மரியன்னையின் பிறந்தநாளை முன்னிட்டு எமது பங்கின் மரியாயின் சேனை அங்கத்தவர்களால் அன்னையின் திருச்சுரூபம் பவனியாக கொண்டு வரப்பட்டு நிறைவில் மரியன்னையின் பிறந்தநாள் கேக் வெட்டப்பட்டது. அருட்சாதன திருப்பலியிலும், திருவிழாத் திருப்பலியிலும் எமது சிறிய குருமட அதிபர் X.I. றஜீவன், அருட்பணி J. சுதர்ஷன், அன்னைத் தெரேசா கன்னியர் மட அருட்சகோதரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி 04ம் பக்கத்தில்......

## "திருச்செபமாலையைச் செபிப்போம்"

### – திருத்தந்தை பிரான்சிஸ்



'அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட புரட்டாதி (ஒக்டோபர்) மாதம் முழுவதிலும் உலகலாவிய ரீதியில், நம்பிக்கை கொண்டோர் அனைவரும் "திருச்செபமாலையைச் செபியுங்கள்" எனத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். செபமாலைத் தியானத்தின் முடிவில் அன்னை மரியாவினதும் அதிதூதரான புனித மிக்கேலினதும் பரிந்துரையை நாடி இறைவனிடம் இருந்து எங்களைப் பிரிக்க எத்தணிக்கும் சாத்தானையும், அவனது மாய வலைகளையும் தகர்த்தெறிய செபிக்குமாறு அழைப்பு விடுக்கின்றார். இந்த நோக்கத்திற்காக பின்வரும் பரிந்துரைகளைச் செபிக்கப் பணிக்கப்படுகின்றோம்.

(1) இறைவனின் புனித அன்னையே, இதோ உம்மை சரணடைந்தோம். எங்கள் தேவைகளில் எங்களைப் புறக்கணியாதேயும். மகிமை மிகுந்த கன்னியே, விண்ணுலக பேறுபெற்ற அரசியே, அனைத்துத் துன்பங்களில் இருந்தும் எங்களை என்றும் காத்தருளும்.

(2) அதிதூதரான புனித மிக்கேலே, எங்கள் போராட்டத்தில் எங்களைக் காத்தருளும். பசாசின் வஞ்சக சூழ்ச்சிகளில் எங்கள் துணையாயிரும். தாழ்மையான எங்கள் மன்றாட்டைக் கேட்டு, இறைவன் பசாசைக் கண்டிப்பாராக! நீரும் விண்ணகப் படையின் தலைவரே! மக்களைக் கெடுக்க உலகில் சுற்றித்திரியும் பேயையும் மற்ற கெட்ட அரூபிகளையும் இறைவலிமையால் நரகத்தில் தள்ளுவீராக. ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித ஆன்மா எத்துனை விலையேறப் பெற்றது எனில் அதன் பிறப்பு முதல் ஒரு காவல் தூதர் கொடுக்கப்பட்டுள்ளார். (புனித ஜெரோம்)

சுயவிழிப்புணர்வுத் தொடர் - 06







# இன்னுமா தயக்கம்!

இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே! திருமலை தீபம் இதழ் வாயிலாக மீண்டும் உங்களை சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். சென்ற இதழில் மகிழ்ச்சி அன்பு செய்வதில் இருக்கின்றது என்பதைப் பார்த்தோம். அதே வேளையில், அன்பு என்பது சில நேரங்களில் சாத்தியமில்லாத ஒன்றாக மாறிவிடுவதையும் நாம் பார்க்கின்றோம். இந்த இதழில், அன்பு செய்ய முடியாததன் காரணத்தை ஆராய்ந்து, அந்தக் காரணத்தை எப்படிக் களைவது என்பதை பற்றிப் பார்ப்போம்.

இந்த உலகில் மனிதனிடம் நிரந்தரமாக இருப்பது, மாற்றம். இந்த மாற்றம் எதனால் வருகின்றது என்று நாம் பார்த்தோமென்றால், சற்று ஆச்சரியமாக இருக்கும். நாம் சில வேளைகளில் மாற்றம் வேண்டாம் என்று பேசிக் கொண்டிருந்தால் கூட, மாற்றங்களை மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம் என்றால் அது மிகையாகாது. ஏன் நாம் மாற்றங்களை எதிர்பார்த்திருக்கின்றோம்?

இவற்றிற்குக் காரணம், ஒரே வார்த்தையில் நாம் சொல்லிவிடலாம்: "நிம்மதியின்மை". நாம் ஆலயத்திற்குச் செல்கின்றோம். ஆலயத்தில் இறைவனிடம், "ஆண்டவரே என் வாழ்வை இப்போதுள்ள அவல நிலையிலிருந்து சிறப்பாக மாற்றிவிடு. என் வாழ்வில் எனக்கு பல முக்கியமான தேவைகள் பூர்த்தியாகவில்லை, எனவே அதற்காக எனக்கு அது வேண்டும், இது வேண்டும்' என்று தான் முதலில் வேண்டுகின்றோம். நம் மனதில், நம் வாழ்வின் பல்வேறு விடயங்கள் பிடிக்காதவையாக இருக்கின்றன, பல விடயங்கள் தேவையற்றவையாக இருக்கின்றன, பல விடயங்களை நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம், ஆனால் அவை நமக்கு இன்னும் கிடைக்கவில்லை. நமக்குக் கிடைத்திருக்கும் சில நம் மகிழ்ச்சிக்கு ஊறுவிளைவிப்பவையாக இருக்கின்றன. இவற்றை எப்படியாவது மாற்றிவிட வேண்டும் என்பதே நம் முழுமுதல் எண்ணமாக இருக்கின்றது. இவ்வாறு நமக்குப் பிடிக்காமல் நம் வாழ்வில் இருப்பவற்றை மாற்ற வேண்டும் என்ற எண்ணமே நம் நிம்மதியின்மையாகும். நாம் நினைப்பது எல்லாம் நிறைவேறிவிட்டால் அதுவே நம் மகிழ்வாகும். ஆனால். ஏதாவது ஒருவிதத்தில் நாம் நிம்மதி இழந்தவர்களாகவே இருக்கின்றோம். எனவே முதல் முயற்சியாக இறைவனிடம் அதைப் பற்றி முறையிடுகின்றோம், அதன் பின், நாமே அதை எப்படித் தீர்க்கலாம் என்று சிந்தித்து முடிவெடுக்கின்றோம், அதனை நிறைவேற்ற பல முயற்சிகளை மேற்கொள்கின்றோம்.

அன்பார்ந்தவர்களே! உண்மையில் பார்த்தால், இந்த உணர்வு நல்லது. இது மனித குலத்திற்கு கடவுள் கொடுத்த ஒரு சக்தி. கவலை, பயம், கோபம், வெறுப்பு போன்ற உணர்வுகளைப் போன்று இந்த நிம்மதியின்மையும் ஒரு சக்தி. நிம்மதியின்மை, ஒரு எதிர்மறை எண்ணம் என்று சொல்லிக் கொண்டிருக்கும் வேளையில். அதனை சக்தி என்று சொல்வது எந்தவிதத்தில் நியாயம் என்று நீங்கள் கேட்கலாம்.

வரலாற்றில் பல நல்ல காரியங்கள் நடந்தது இந்த நிம்மதியின்மையால் தான் என்றால் அது மிகையாகாது. மனிதனின் அனைத்து அறிவியல் கண்டுபிடிப்புக்களுமே இந்த நிம்மதியின்மையால் உருவானவை என்பதே உண்மையாகும். காலில் முள் குத்துவதால், உருவான நிம்மதியின்மை, செருப்பை உருவாக்கியது. தலைச்சுமையாக பொருட்களைச் சுமந்து செல்ல முடியாத நிலையில் ஏற்பட்ட நிம்மதியின்மை, உருளையை உருவாக்கியது. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வேகமாக செல்ல முடியவில்லையே என்ற நிம்மதியின்மை, மோட்டார் வாகனங்களை உருவாக்கியது. இது போன்று அனைத்து அறிவியல் கண்டுபிடிப்புக்களுக்கும் ஏதோ ஒரு நிம்மதியின்மையே காரணமாக அமைந்துள்ளது. எனவே தான் நாம், இந்த நிம்மதியின்மை கடவுளால் மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு முக்கியமான சக்தி என்று கூறுகின்றோம்.

அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்று சொல்வார்கள். அது போல இந்த நிம்மதியின்மை அதன் அளவிற்கு மிகுத்துச் செல்லும் போது, அது பெரும் பிரச்சனையாக மாறிவிடுகின்றது. மனிதன் தேவையற்ற பலவற்றை நினைத்துக் கலங்குவதால் தேவையான பலவற்றை விட்டுவிட்டு, அவன் தேவையற்ற பல விடயங்களை தன் வாழ்வில் உருவாக்கி, அதற்கே அதிமுக்கியத்துவம் கொடுத்துவிட்டு அதிலிருந்து மீளமுடியாமல் தவிக்கின்றான். குறிப்பாக, இன்று பணத்தைத் தேடாத மனிதர்களே இல்லை எனலாம். ஒவ்வொரு நாளும் தனக்குத் தேவைப்படுகின்ற அளவிற்கு அதிகமாகவே கிடைத்தாலும், பணத்தை முன்னிட்டு மனிதன் போதும் என்று சொல்வதேயில்லை. உண்ணும் உணவைப் போதும் என்று சொல்லும் மனிதன், அந்த உணவை வாங்குவதற்குப் பயன்படும் பணத்தை ஒருபோதும் போதும் என்று சொல்வதில்லை. காரணம், அந்த பணம், அவனுக்கு எதிர்காலத்தைப் பற்றிய பாதுகாப்பு நம்பிக்கையைத் தருகின்றது. பணம் தன்னிடம் அதிகமாக இருந்தால் ஒரு மனிதன் தன் எதிர்காலம் பாதுகாப்பாக இருக்கும் என்று நம்புகின்றான். அதன் காரணமாக அவன் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்று ஓடிக் கொண்டே இருக்கின்றான். இதிலே ஒரு சிறிய இடைவெளியில் தான் அவன் கடவுளைத் தேடி வருவது. இந்த நிலையில் பணம், தெளிய முடியாத ஒரு போதையை மனிதனுக்கு ஏற்படுத்திவிடுகின்றது. அதிலிருந்து மனிதன் மீள்வது மிகக் கடினமாகி விடுகின்றது.

அன்பார்ந்தவர்களே! இப்படி நாம் ஏற்படுத்தி வைத்திருக்கும் பண ஆசை, நம்மில் பல தீமைகளை உருவாக்குகின்றது என்றால் அதை நம்மால் நம்ப முடிகின்றதா? இவ்வாறு தீமைகளை உருவாக்கும் பணத்தைத் தான் நாம் தேடித் தேடி சம்பாதித்துக் கொண்டிருக்கின்றோம். பணம் தருகின்ற தீமைகள் என்னவென்பதை சற்று சுருக்கமாகப் பார்ப்போம். போதும் என்ற மனத்தை பணம் ஒருபோதும் தருவதில்லை. எவ்வளவு பணம் இருந்தாலும், இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும்... என்ற எண்ணத்தையே அது உருவாக்குகின்றது. எனவே நாம் பணம் சம்பாதிக்க பல யுக்திகளைக் கையாள தூண்டப் படுகின்றோம். அதில் ஒரு வழியே ஏமாற்றும் வழி. நேரிய வழியில், பணம் நம்மை தூண்டும் அளவிற்கு பணம் சம்பாதிக்க முடியாது என்ற எண்ணத்தை அது ஏற்படுத்துவதால், நாம் குறுக்கு வழிகளைத் தேர்ந்தெடுக்கின்றோம்.

அந்தக் குறுக்கு வழிகளால் எத்தனை பேர் எப்படிப் பாதிக்கப் பட்டாலும், நாம் கவலைப் படுவதில்லை. காரணம்: பணம்! இந்தப் பணத்திற்காக யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம், எந்தத் தவற்றை வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலைக்கு நாம் தள்ளப்படுகின்றோம். நான் முன்னரே சொன்னது போல், மனிதன் தேவையான பலவற்றை மறந்துவிட்டு தேவையற்றவைகளை தேவை என நினைத்து அதற்கு தன் முழு சக்தியையும் செலவளித்துக் கொண்டிருக்கின்றான். இந்த இடத்தில் பணம் சம்பாதிப்பதற்காகவே தன் முழு சக்தியையும் செலவளிக்கும் மனிதன், அந்த அதீதப் பணம் தேவைதானா? என்று சிந்திப்பதே இல்லை. அவனுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் அன்பு பாசம், உறவுகள், மனநிறைவு ஆகியவற்றை புறந்தள்ளி, தன் தேவைக்கும் அதிகமாக, தன்னால் உபயோகப்படுத்தவே முடியாத பணத்திற்காக அவன் ஓடி ஓடி உழைக்கின்றான், அதற்காக பல மனிதர்களை ஏமாற்றுகின்றான், பலரைக் காயப்படுத்துகின்றான்... இதன் மூலம், தன் அழகான மனித இயல்பையே இழக்கின்றான். இவையே பணம் மனிதனுக்குத் தரும் பரிசுகள். பணத்தின் மூலமாக வரும் நிம்மதியின்மை, ஒருவிதமான போதை, அது அளவு கடந்தது. அளவிற்கு மிஞ்சிய நிம்மதியின்மை... எனவே நாம் ஒரு முக்கியமான உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும், 'பணம் தன் ஊழியர்களை ஒருபோதும் நல்லவர்களாக நிம்மதியாகவோ வாழவே விடாது, அவர்களை ஒருவிதமான போதையின் மூலம் தன் கட்டுப்பாட்டுக்கு உள்ளேயே வைத்திருக்கும்!'

இவை ஒரு விதமான மாயையாகும். மாயை அல்லது கானல் நீர், நமக்கு இருப்பதைப் போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்துகின்றதே தவிர, உண்மையில் அது இருப்பதில்லை. பணமும் ஒருவிதமான மாயத் தோற்றமே. நற்செய்தியில் பல இடங்களில் ஆண்டவர் இயேசு பணத்தைப் பற்றி பேசுகின்றார். 'பணக்காரன் இறையரசில் நுழையவே முடியாது' என்றும் அதற்கான சில உவமைகளையும் அவர் கூறுகின்றார். லூக்கா 16ம் அதிகாரத்தில் ஒரு உவமையை ஆண்டவர் கூறுகின்றார். ஒரு நேர்மையற்ற கண்காணிப்பாளன், தான் செய்த தவறுகளுக்காக வேலை நீக்கம் செய்யப்படும் நிலையில் இருக்கின்றான். அவன், தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக இன்னும் அதிகமான தவறுகளைச் செய்து அந்தத் தவறுகள் அவனுக்கு பாதுகாப்பு கொடுக்கும் என்று நம்புகின்றான். அந்தத் தவறுகளுக்காக அவனுடைய தலைவன் அவனை பாராட்டுவதைப் போன்று அந்த பகுதி வருகின்றது. அதில் மேலும், இருளின் மக்கள் ஒளியின் மக்களை விட முன்மதியுடையோராய் இருக்கின்றனர் என்ற வாக்கியமும் வருகின்றது. இந்த விவிலியப் பகுதியைப் படிக்கும் நாம், நல்லவனாய் இருப்பதை விட முன்மதியுடையோராய் இருப்பதையே கடவுள் பாராட்டுகின்றார் என்ற எண்ணம் தோன்றும்.

உண்மையில் இது ஒரு வஞ்சப் புகழ்ச்சி அணியாகும். இந்த உவமையில் வரும் நேர்மையற்ற கண்காணிப்பாளன், ஏற்கனவே செய்த நேர்மையற்ற செயலால் தன் வேலையை இழந்து நிற்கின்றான். இது தான் உண்மை நிலை. ஆனால், மேலும் மேலும் அவன் தன் தவற்றை அதிகப் படுத்திக் கொண்டே செல்கின்றானே தவிர தன் நிலையை உணர்வதாகத் தெரியவில்லை. இந்த நிலையில், அவன், தான் தவறு செய்வதால் தன்னை பிறர் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கின்றான். இந்தக் கேள்வியை நமக்கு நாமே கேட்டுப் பார்ப்போம். ஒரு நிறுவனத்தில் நம் கண்முன் பல நேர்மையற்ற செயல்களைச் செய்த ஒரு பணியாளன் அங்கிருந்து பணி நீக்கம் பெற்று நம் வீட்டிற்கு வந்தால், நாம் அவனுடைய நேர்மையற்ற செயலால் சற்று லாபமடைந்திருந்தாலும், அவனை நம் வீட்டில் வேலைக்கு வைத்துக் கொள்வோமா? இந்தக் கேள்விக்கு, நிச்சயமாக இல்லை என்ற பதிலைத் தான் தருவோம். காரணம், சில நாட்கள் கழித்து, அவன் தன் முந்தைய நிறுவனத்தில் செய்த அதே நேர்மையற்ற வேலைகளை நம்மிடமும் செய்வான் என்பதை நாம் நன்கறிவோம். இந்த நிலையில் அவனுக்கு நாம் எப்படி நம் வீட்டில் இடம் தருவோம்? இந்த நிலையை எப்படி முன்மதி என்று கூற முடியும்? அப்படியானால், இருளின் மக்கள் ஒளியின் மக்களை விட முன்மதியுடையோரா, மதிகேடரா?

அன்பார்ந்தவர்களே! நம்மில் பலருக்கு இருக்கும் மாயையான எண்ணமே இது. தீமை நமக்கு நன்மையைப் பெற்றுத் தரும் என்று நம்புகிறோம். ஆனால் உண்மையில், தீமை ஒருபோதும் நமக்கு நன்மையைப் பெற்றுத் தராது. நன்மையால் விளையும் நன்மை சற்று காலதாமதமானாலும் அது நிலைத்திருக்கும் நன்மையாகும். அதுவே உண்மையாகும்.

இந்த மாயை மூலமாக நாம் கொண்டிருக்கும் நிம்மதியின்மையை நிச்சயமாக நீக்கவே முடியாது. எவ்வளவு முயற்சிகள் செய்தாலும், இந்த நிம்மதியின்மைக்கு முடிவே இல்லை. ஆனால், அந்த நிம்மதியின்மையை போக்க நாம் தொடர்ந்து பல வழிகளில் முயன்று கொண்டே இருக்கின்றோம், எதுவும் பலனளிப்பதே இல்லை. அதனால் தான் விரக்தி, பொறாமை, கவலை, வெறுப்பு, கோபம் போன்றவை நம் மனதில் நிறைகின்றன. இந்த நிம்மதியின்மை ஒரு போதை. நாம் இந்தப் போதைக்காக எதையும் செய்யத் துணிகின்றோம். யாரையும் ஏமாற்றலாம், எவருக்கும் துரோகம் செய்யலாம், எந்த தீமையையும் செய்யலாம், அதன் மூலம் பணம் மட்டும் வந்தால் போதும்! என்ற நிலைக்கு வந்துவிடுகின்றோம். எனவே தான் இந்தக் கட்டுரையின் முந்தையப் பகுதியில் நான், "பணம் தன் ஊழியர்களை ஒருபோதும் நல்லவர்களாக வாழவே விடாது" என்று கூறியிருந்தேன். இதைத் தான் ஆண்டவரும், "ஊசியின் காதில் ஒட்டகம் நுழைந்தாலும், பணக்காரன் இறையரசில் நுழைய முடியாது!" என்று கூறுகின்றார்.

எனவே நிம்மதியின்மை நல்லது தான். ஆனால், நாம் கொண்டிருக்கும் அந்த நிம்மதியின்மை தேவையானதா, அல்லது தேவையற்றதா? அது உண்மையா அல்லது போதையா என்பதை பகுத்தாயவேண்டும். நம் வாழ்வில் இறைவன் நமக்கென்று அழகான வாழ்க்கையைத் தந்துள்ளார். அந்த வாழ்க்கையின் அழகுகளை நாம் இரசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். அதே நேரத்தில், நமக்கென்று சில பொறுப்புக்களையும் அவர் கொடுத்திருக்கின்றார். அதையும் நாம் உணர வேண்டும். வாழ்க்கையின் அழகுகளை நாம் கண்டுகொள்கின்ற போது, இறைவனின் அன்பை உணர்கின்றோம்! இறைவன் நமக்கு கொடுத்துள்ள பொறுப்புக்களை அறிந்து கொள்கின்றபோது, இறைவன் நமக்குத் தந்துள்ள திறமைகளை உணர்கின்றோம்! எனவே இரண்டும் நம் வாழ்வில் மிக முக்கியமானதாகும். இறைவன் நம் வாழ்வில் கொடுத்துள்ள திறமைகளை உணரும் போது தான் நாம் பிறருக்கு பயனுள்ளவர்களாக மாறுகின்றோம். உலகின் ஒளியாகவும் உப்பாகவும் நாம் வாழவேண்டுமென்றால் நம் திறமைகளை நாம் உணரவேண்டும்.

எனவே நம் வாழ்வில் ஒரு சமநிலையை நாம் பேணவேண்டும். நிம்மதியின்மையால் கவலை கொள்கின்ற அதே வேளையில் நம் வாழ்வின் அழகுகளையும் நினைத்து மகிழ வேண்டும். மகிழ்ச்சியும் கவலையும் ஒன்றாக இணைந்தது தான் வாழ்க்கை. எனவே தான், ஆண்டவர், "எவனொருவன் தன் சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின்செல்கின்றானோ, அவனே என் சீடன்" என்று கூறுகின்றார். அதே நேரத்தில் யாராவது நோயினாலோ பிரச்சனைகளினாலோ துன்பப்பட்டால், அவர்கள் மீது பரிவு கொண்டு அவர்களுக்கு எப்படியாவது உதவி செய்ய வேண்டும் என்று துடிக்கின்றார். சிலுவைகள் என்பது, இறைவன் நமக்குக் கொடுத்துள்ள பொறுப்புக்கள். நம் திறமைகளைக் கொண்டு அந்தப் பொறுப்புக்களை சிறப்பாக திறம் பட செய்து முடித்து இறைவனின் சிறந்த கருவியாக நாம் வாழ வேண்டும் என்பதே இறைவனின் அழைப்பாகும்.

இந்த சமநிலை என்பது மனித வாழ்வுக்கு மிகவும் தேவையான ஒன்று. இந்த சமநிலை பற்றிய மேலதிகக் கருத்துக்களோடு மீண்டும் உங்களை அடுத்த இதழில் சந்திக்கும் வரை அன்பு வணக்கம் கூறி விடைபெறுகிறோம். நன்றி!

இறையாசீருடன் அருட்பணி அலெக்ஸ், க. ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயரின் செய்தி........ 01ம் தொடர்ச்சி

❖ பலவித தொழிற் துறைகளில் உள்ளோரை இனம்கண்டு (மீனவர், வைத்தியர், தாதிகள், ஆசிரியர்கள்) இவர்களுக்கான ஆன்மீக வழிகாட்டல்களைக் கொடுத்தல்.

❖ Extraordinary Missionary Month (EMM) என அழைக்கப்படும் மறைபரப்பிற்கான விசேட மாதத்தை செப்டம்பர் மாதம் 29ம் திகதி அனைத்து ஆலயங்களில் பிரகடனப்படுத்துதல்.

❖ அதே ஞாயிறு தினத்தில் அல்லது ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி செவ்வாய்க் கிழமை பங்குத் தந்தையர்கள் தமது பங்கில் ஒக்டோபர் மாதத்திற்கான செயல்பாடுகளை மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

❖ ஒக்டோபர் மாதம் 4ம் திகதி பங்குகளில் காலை முதல் மாலை வரை நற்கருணை ஆராதனை நடைபெற வேண்டும். பங்குகளில் தமது சூழ்நிலைக்கேற்ப சில மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

❖ ஒக்டோபர் மாதம் 8ம் திகதி அனைத்து குருக்கள், துறவிகள், கத்தோலிக்க நிறுவனங்களில் பணிசெய்யும் பணியாளர்களுக்கான விசேட நற்கருணை ஆராதனை யு+பிலி மண்டபத்தில் காலை 9.00 மணி முதல் மதியம் 12 மணிவரை நடைபெறும்.

❖ ஒக்டோபர் மாதம் 13ம் திகதி ஞாயிறு தினத்தன்று மறைசாட்சிகளாக வாழ்ந்த புனிதர்கள், மறைசாட்சியர், விசேடமாக இலங்கையின் அப்போஸ்தலர் புனித யோசேவ் வாஸ் இவர்களை நினைவுகூர்தல்.

❖ ஒக்டோபர் 20ம் திகதி ஞாயிறு தினம் மாலை 5.00 மணிக்கு புனித மரியாள் பேராலயத்தில் விசேட திருப்பலி நடைபெறும். இதில் குருக்கள், துறவியர், பொதுநிலையினர் கலந்துகொண்டு திருஅவையின் மறைபரப்புப் பணிக்காக செபிப்பர்.

❖ ஒக்டோபர் 26ம் திகதி சனிக்கிழமை காலை மறைமாவட்ட ரீதியில் செபமாலை திருப்பவனி நடைபெறும். இது நிலாவெளி பங்கைச் சேர்ந்த கும்புறுப்பிட்டி புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்திலிருந்து தொடங்கி குச்சவெளி செபமாலை அன்னை ஆலயம் நோக்கி நடைபெறும்.

பங்கு மட்டங்களில் மேலும் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தலாம். எமது இந்த சிறப்பு செயல்பாடுகள் தொடர வேண்டும். எதிர்காலத்திலும் இதுபோன்ற முயற்சிகள் மூலமாக நாம் ஒரே திருஅவையாக எமது மக்களின் ஆன்மீக நலனில் கவனம் கொண்டு அவர்களை ஊக்கப்படுத்தலாம்.

இறையாசீர் உங்களோடு தங்கி இந்த சிறப்பு மாதத்தில் உங்களை வழிநடத்துவதாக.

கிறிஸ்துவில்,
பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்.
திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.

## ஐப்பசி 2019
## மறைமாவட்ட நிகழ்வுகள்

01.10.2019
செவ்வாய்க்கிழமை : குழந்தை இயேசுவின் புனித திரேசா - விழா: அதி விசேட மறைபரப்பு மாத செயல்பாடுகளின் ஆரம்பம்.

04.10.2019
வெள்ளிக்கிழமை : அசிசி நகர் புனித பிரான்சிஸ் - நினைவு. எல்லாப் பங்குகளினும் நற்கருணை ஆராதனை.

06.10.2019
ஞாயிற்றுக்கிழமை: புனித பவுஸ்தீனா - விழா: இறைஇரக்கத் திருத்தலம், அலஸ்தோட்டம் - புளியங்குளம்.

07.10.2019
திங்கள்கிழமை : புனித செபமாலை அன்னை - நினைவு.

08.10.2019
செவ்வாய்கிழமை : குருக்கள், துறவற சபையினர், ஆணைக்குழு உறுப்பினர்களுக்கான நற்கருணை ஆராதனை.

12.10.2019
சனிக்கிழமை : புனித வின்சன்ட் டி பவுல் ஆலோசனை சபை - மாதாந்தக் கூட்டம்.

13.10.2019
ஞாயிற்றுக்கிழமை: தேசிய பொதுநிலையினர் ஞாயிறு.
: இருதயபுரம் - சோமபுரம் புனித யூதா ததேயு ஆலய வருடாந்தத் திருவிழா.

19.10.2019
சனிக்கிழமை : தேசிய மறையாசிரியர் பரீட்சை.
: கி. வா. சமூகம் - மாதாந்த நற்கருணை ஆராதனை.

20.10.2019
ஞாயிற்றுக்கிழமை: மறைபரப்பு ஞாயிறு.

26.10.2019
சனிக்கிழமை : அன்பியம் மறைமாவட்ட ஊக்குவிப்பாளர்களுக்கான கூட்டம்.
: நிலாவெளி மறைக்கோட்டம் - திருச்செமாலைப் பேரணி. (கும்புறுபிட்டியில் ஆரம்பித்து குச்சவெளியில் நிறைவடையும்.)

27.10.2019
ஞாயிற்றுக்கிழமை: பொதுக்காலம் 30ம் ஞாயிறு.
: உவர்மலை - இலிங்கநகர் புனித யூதா ததேயு ஆலய வருடாந்தத் திருவிழா.
: கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் - கூட்டம்.

# பதிப்பாசிரியர் பகிர்வு

**அருட்பணியாளர். T. கிங்ஸ்லி றொபட்**

அன்பிற்கினிய வாசகப் பெருமக்களே!

நம் திருத்தந்தை பிரான்சிஸ் 2019ம் ஆண்டின் ஐப்பசி மாதத்தை அதி விசேட மறைபரப்பு - (நற்செய்தி அறிவிப்பு) மாதமாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். இவ் அதி விசேட நற்செய்தி அறிவிப்பு மாதம் "திருமுழுக்குப் பெற்றோரும் அனுப்பப்பட்டோரும்" எனும் கருப்பொருளோடு பிரகடனப்படுத்தப்படுகின்றது.

இந்த விசேட பிரகடனத்தின் வழியாக "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற் 16:15) என்ற இயேசுவின் கட்டளையை நினைவூட்டி, கிறிஸ்துவின் திருஅவையாக நாம் உலகில் மேற்கொள்ளவேண்டிய நற்செய்தி அறிவிப்புப் பணி பற்றிய ஒரு தெளிவை நமக்குக் கொடுத்திருக்கின்றது. இதில் குறிப்பாக, "மாக்சிமம் இலுட்" (Maximum Illud) என்ற திருத்தூது மடல் வழியாக திருத்தந்தை பதினைந்தாம் (15) பெனடிக்ட் அவர்கள் தெரிவித்த மறைபரப்புப் பணி சார்ந்த கவனயீர்ப்பையும், "நற்செய்தியின் மகிழ்ச்சி" என்னும் திருத்தூது ஊக்கவுரையில் திருத்தந்தை பிரான்சிஸ் கோடிட்டுக் காட்டும் "மறைபரப்புப் பணியே திருஅவையின் எல்லா செயல்பாடுகளுக்கும் அடிப்படை வாய்ப்பாடாகும்" (நம 15) என்ற உயிரோட்டமுள்ள நற்செய்தி அறிவிப்புப் பணியின் தன்மையையும் இணைத்து "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" என்ற கிறிஸ்துவின் பணிப்புரையை ஊக்குவித்து நற்செய்தி அறிவிப்புப் பணியை புதிய உத்வேகத்துடன் மேற்கொள்ள வழி வகுக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட அதி விசேட நற்செய்தி அறிவிப்பு மாதத்தில் நாம் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளையும் திருத்தந்தை பிரான்சிஸ் கோடிட்டுக் காட்டியுள்ளார். இவை நான்கு தலைப்புகளில் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

**1) உயிர்த்த இயேசு அனுபவம்:**
அன்றாட வாழ்வின் அனுபவங்கள் வழியாக, சிறப்பாக திவ்விய நற்கருணை, இறைவார்த்தை, தனிநபர் மற்றும் குழும மன்றாட்டு (செபம்) என்பவற்றின் ஊடாக உயிர்த்த இயேசுவைச் சந்தித்து பலமும் சக்தியும் பெற்றுக்கொள்ள முயலுதல்.

**2) சாட்சிய வாழ்வு:**
நற்செய்தி அறிவிப்புக்காக வாழ்ந்த புனிதர்கள், தங்கள் வாழ்வையே நற்செய்தி அறிவிப்புக்காகத் தியாகம் செய்த மறைசாட்சியர், இறையடியார்கள் பற்றிய அறிவை வளர்த்துக்கொள்ள முயலுதல். சிறப்பாக இலங்கை நாட்டின் திருத்தூதரான புனித யோசே வாஸ் அடிகளார் பற்றிய அறிவை ஆழப்படுத்துதல் நமது மறைமாவட்டத்தை அல்லது பங்கைச் சார்ந்த மூத்த உறுப்பினர்களின் நற்சான்றுகள் நிறைந்த ஆன்மீக வாழ்வு பற்றி எடுத்துரைத்தல் மற்றும் அவர்களை கௌரவித்தல் போன்றவை.

**3) விவிலியம், மறைக்கல்வி, ஆன்மீகம், இறையியல் சார்ந்த உருவாக்கம்:**
ஒவ்வொரு பங்கிலும் சாதாரணமாக இடம்பெறும் உருவாக்கல் நிகழ்வுகளை சற்று ஆழமாக்கி, நற்செய்தி அறிவிப்பு சார்ந்த படிப்பினைகளை விவிலியம், மறைக்கல்வி, ஆன்மீகம், இறையியல் போன்ற கோணங்களில் தகுந்த முறையில் வெளிக்கொணர முயற்சி எடுத்தல்.

**4) அன்புச் செயல்கள் (செயற்பாடுகள்):**
திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப் பணியின் ஓர் அம்சமான அன்புச் செயல்களை (Charity) ஊக்குவிக்கும் வண்ணம் தேவையில் உள்ளோருக்குத் தாராளமாக வாரி வழங்கும் செயற்திட்டங்களை முன்னெடுத்தல்.

மேற்படி தலைப்புக்களை முதன்மைப்படுத்தும் வண்ணம் பின்வரும் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது:

- 06-10-2019 ஞாயிறு:செப அனுபவம் வழியாக உயிர்த்த இயேசுவைச் சந்தித்தல்.
- 13-10-2019 ஞாயிறு:புனிதர்களின், மறைசாட்சியரின் சாட்சிய வாழ்வு.
- 20-10-2019 ஞாயிறு:மறைபரப்பு ஞாயிறு கொண்டாட்டம்.
- 27-10-2019 ஞாயிறு:மரியன்னை பக்தியை மெருகூட்டி, திருச்செபமாலை வழியாக அன்னைக்கு புகழாரம் சூட்டி, நடைமுறைசார்ந்த அன்பு செயல்களில் ஈடுபடுதல்.

**மேற்படி செயல்பாடுகள் அனைத்திலும் முழு ஆர்வத்துடன் பங்கெடுப்போம்!**
**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கனவை நனவாக்குவோம்!**

## காந்தி ஜெயந்தியையொட்டி பல்சமயத் தலைவர்கள்




அகிம்சையின் திருத்தூதராகிய மகாத்மா காந்தி அவர்கள் பிறந்ததன் 150ம் ஆண்டு நிறைவைச் சிறப்பிக்கும் விதமாக, திருப்பீட பல்சமய உரையாடல் அவை, அக்டோபர் 01ம் திகதியன்று ஒரு நாள் கருத்தரங்கை உரோம் நகரில் நடத்தியது

இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட பல்சமய வல்லுனர்கள், அக்டோபர் 02ம் திகதி புதன்கிழமையன்று வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் நடைபெற்ற திருத்தந்தையின் மறைக்கல்வி உரையிலும் கலந்து கொண்டனர். திருத்தந்தையும் மகாத்மாகாந்தி அவர்கள் பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்ட இவர்களை வரவேற்பதில் மிகவும் மகிழ்கிறேன் என்று இத்தாலிய மொழியில் அவர்களை வாழ்த்தினார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையா அது என்ன?



இவ்வாறாக இயேசுவை பிலாத்துவிடம் ஒப்புவித்த யூதர்கள் வழியில் தாங்களே உண்மையை மறுதலிக்கின்றார்கள். இதனால் தாங்களே தமக்கு தண்டனைத் தீர்ப்பை வரவேற்றுக் கொள்கின்றார்கள். அதனை விட 'இயேசு தன்னையே இறைமகன்' என்று கூறி கடவுளைப் பழிக்கின்றார் என்ற குற்றச் சாட்டை வைத்த யூதர்கள் (தலைமைக் குருக்கள்) பிலாத்து உங்கள் அரசனை நான் சிலுவையில் அறைய வேண்டும் என்கிறீர்களா? என்று கேட்ட போது, 'எங்களுக்கு சீசரைத் தவிர வேறு அரசர் இல்லை' என்று சொல்லி ஜாற்றுர் ஆகிய ஒரே இறைவனைத் தாங்களே மறுதலிக்கின்றார்கள். அதாவது ஜாற்றுர் இறைவனே அவர்களுக்கு ஒரே அரசர், அதனை விட அவர் திருப்பொழிவு செய்த சவுல், தாவீது, சாலமோன் போன்றவர்களே யூதர்களின் அரசர்கள். இங்கு ஜாற்றுர் திருப்பொழிவு செய்யாத புறவின பேரரசர் சீசரை தமது அரசராக ஏற்று கடவுளைப் பழித்துரைக்கின்றார்கள். உண்மையை மறுதலிக்கின்றார்கள்.

ஆளுநர் பிலாத்துவிற்கும் கூட (இயேசுவை) 'உண்மையை' அறிவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. பிலாத்துவுடனான உரையாடலில் இயேசு தன்னை யாரென அவனுக்கு வெளிப்படுத்துகின்றார். ஆனால் 'உண்மையாகிய' (இறைமகனாகிய மெசியா) இயேசுவை பிலாத்து குற்றமற்றவராக தேர்ந்து தெளிந்தும் சீசரா இயேசுவா எதனை தெரிவு செய்வது என்ற நிலைக்கு தள்ளப்படும் போது 'உண்மையை' மறுதலித்து இயேசுவை சிலுவையில் அறைந்து கொள்வதற்கு யூதர்களிடம் தீர்ப்பிட்டு கையளிக்கின்றான். இதனால் தனக்கும் தானே தண்டனைத் தீர்ப்பிட்டுக் கொள்கின்றான். இன்றைய இந்த நவீன உலகிலே 'உண்மை' என்பது அகராதியில் இருந்தாலும் பல ஆட்சியாளர்களின், ஏன் பல சாதாரண மனிதர்களின் மனங்களிலிருந்து அழிந்து போய்க் கொண்டிருக்கின்றது. தேர்தல் பிரச்சாரங்களில் அரசியல்வாதிகளின் உறுதிமொழிகளும் வெற்றிபெற்ற பின்பு அவர்களது ஆட்சியில் இந்த உறுதிமொழிகளின் ஸ்திரமற்ற தன்மையும் எம் அனைவருக்கும் தெரிந்ததே. இதுதான் 'உண்மையின்' இன்றைய நிலைப்பாடு. ஏன் எமது கண்ணுக்கு முன்னால் நடைபெற்ற அட்டூழியங்கள் இன்றைய எமது அதிகார வர்க்கத்தின் சொற்களில் நடைபெறாத விடயங்களாக காணப்படுகின்றன. காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள், இந்த உலகிலே இன்னும் பிறக்காத,உலகிலே வசிக்காதவர்களா? எமது இந்த உறவுகள் எம்மோடு வாழ்ந்தார்கள் என்பது பொய்யா? அவர்கள் எங்கே? உண்மை எங்கே?

தொடரும்.................

ச. யூட் கெமில்டன்
புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்

# நீதிமன்றங்களும் மத்திய சபைகளும்



மக்களிடையே விட்டுக்கொடுப்பும், புரிந்துணர்வும் மன்னிக்கும் மனப்பான்மை இருந்தால் எது வித பிணக்குகளும் எழ வாய்ப்பில்லை

இலங்கையில் வாழ்கின்ற மக்களிடையே உள்ள சட்டமுறைகள், பிரச்சனைகள். முரண்பாடுகள் எழுகின்ற அநேக சந்தர்ப்பங்களில் தங்களுக்குரிய நியாயத் தீர்ப்புக்களை பெற நீதி மன்றங்களை நாடுகின்றனர். நீதிபதி முன்னிலையில் முறைப்பாடுகளை வழக்காளி , பிரதிவாதி அனைவரும் தங்களது பிணக்குகளைச் சமர்ப்பித்து பின்னர் சட்டத்தரணிகள் மூலம் நீதி மன்றத்தில் ஆஜராகி மனுத்தாரர் பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணிகளே வாதாடுகின்றார்கள். இவர்களது வாதாட்டத் திறன்களையும், ஆதாரங்களையும், சாட்சிகளையும் கருத்திற்கொண்டு நீதிபதி அவர்கள் தீர்ப்பு அதாவது நீதி வழங்குகிறார். ஒருசாரார் களிப்புடன் செல்கிறார்கள் 2ம் கட்சிக்காரர் மனவேதனையுடன் செல்கின்றனர்.

இது வழமையாக நடைபெறும் விடயம் இதனால் நீதி மன்றத்தின் செயற்பாடுகள் அதிகமேயொழிய குறைந்தபாடில்லை நாளாந்தம் தாக்கல் செய்யும் வழக்குகள் அதிகமாகிக் கொண்டு போகின்றன. சிலர் மற்றவரை கோட். கச்சேரியென்று அலைக்கழித்து கூட்டில் ஏற்ற வேண்டுமென கங்கணம் கட்டிச் செயற்படுபவர்களும் இருக்கின்றார்கள்.

இவ்வகைச் செயற்பாட்டால் கூடிக் கொண்டிருக்கும் நீதி மன்றங்களின் வழக்குகள் விசாரணைகளை மேற்கொள் இச்சபைகள் கி.மு 425ம் காலப்பகுதியில் கூட செயற்பட்டன 1856ம் ஆண்டு கிராம நீதி மன்றங்கள் வழியாக பாரம்பரிய முறைகளில் கிராமப் பிரச்சனைகளை சமூகமாகத் தீர்க்க எடுத்த முயற்சிகள் பலனளிக்காது போய்விட்டன. இதனால் நீதி மன்றங்களில் தேங்கிக் கிடக்கும் வழக்குகளின் தாக்கம் சமூகத்தலைவர்களைக் கொண்ட மத்தியஸ்தர்களாக இணக்க சபைகள் சட்டப்படி உருவாக்கப்பட்டது. அந்நேரம் சிறிய சொத்து சம்பந்தமான விடயங்களைக் கொண்ட வழக்கையும் சட்டவிரோத செயலையடக்கிய வழக்குகளையும் விசாரித்துத் தீர்வு காணுவது இச்சபைக்குப் பொறுப்பாக்கப்பட்டது.

தொடரும்............

சாமஸ்ரீ தேசமானிய சந்தியா ஜோன்பிள்ளை அந்தோனிப்பிள்ளை
அகில இலங்கை சமாதான நீதவானும் மத்தியஸ்தரும்

# மறைக்கோட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி மற்றும் உதைப்பந்தாட்ட போட்டிகள்



நிலாவெளி மறைக்கோட்ட ரீதியாக கடந்த 21.04.2019 உயிர்ப்பு தினத்தன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி எமது நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலை காரணமாக பிற்போடப்பட்டிருந்தது. இந்தப் போட்டியானது 31.08.2019 அன்று காலை 10.00 மணியளவில் நடைபெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவான கன்னியா கிறிஸ்து அரசர் ஆலய அணிக்கும் நிலாவெளி புனித சூசையப்பர் ஆலய அணிக்குமான இறுதிப்போட்டி 08.09.2019 மாலை 3.30மணிக்கு ஆரம்பமானது. இப்போட்டியில் கன்னியா கிறிஸ்து அரசர் ஆலய அணியினர் வெற்றி பெற்றனர். மேலும் அன்றைய தினம் வருடாவருடம் எமது பங்கில் பணியாற்றி இறைபதம் அடைந்த அருட்பணி தேவதாசன் எட்வின் அடிகளாரின் நினைவாக நடாத்தப்பட்டு வருகின்ற உதைப்பந்தாட்டப் போட்டி தொடர்ந்து நடைபெற்றது. இதில் சாம்பல்தீவு வில்லியம்ஸ் அணியும், விக்டரீஸ் அணியும் மோதி விக்டரீஸ் அணியினர் வெற்றி பெற்றனர். இந்நிகழ்விற்கு விருந்தினராக எமது சிறிய குருமட அதிபர் X.I. றஜீவன் அடிகளார் கலந்து சிறப்பித்து வெற்றி பெற்றவர்களுக்கான வெற்றிக் கிண்ணத்தை வழங்கி வைத்தார்.

எமது மறைமாநில ஆயர் அவர்களுக்கும், குருமுதல்வர் அவர்களுக்கும் நவநாள் காலங்களில் திருப்பலியை நிறைவேற்றிய அருட்பணியாளர்களுக்கும் அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் எமது நிலாவெளி மறைக்கோட்ட அருட்பணியாளர்களுக்கும் ஒவ்வொரு வழிகளிலும் ஒத்துழைப்புத் தந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

– பங்குத்தந்தை, பங்கு மக்கள்

# துன்பங்கள் புடமிடும் நெருப்பு



தங்கத்தை புடமிடும் நெருப்பு
தக தகவென பளபளப்பாக்கும்
தரத்தில் உயர்வை அளிக்கும் தங்கம்
தினமும் புடமிடப்படுகிறது

வாழ்க்கை என்பது ஒரு சுழல் சக்கரம்
வழுவாது இன்பமும் துன்பமும் மாறி வருவது
புடமிடும் துன்ப நெருப்பு நுழைந்து விட்டால்
புத்தயிர் தந்து புதுவாழ்வு மலர்கிறது

மானிடமகன் கிறிஸ்துவின் வாழ்வில்
மக்களுக்காக அவர் பட்ட துன்பம் அனந்தம்
துன்பங்களினூடாக புடமிடப்பட்ட கிறிஸ்து
தூயகம் சென்று வெற்றியும் கண்டார்

துன்பங்கள் ஊடாக இறைவன் எம்மை
தூய்மையாக்கி, சீரான வாழ்வு வாழ வழிகாட்டுகிறார்
காயங்களைத் தருபவரும் இறைவனே
காயங்களைக் கட்டுபவரும் அவரே.

துன்பத்தினூடாக வாழ்ந்த மனிதர்
மாமனிதராக, புனிதர்களாக திகழ்ந்தனர்
நீதி வழுவா யோபு, துன்பத்தினூடாக புடமிடப்பட்டு
நீதிமான் எனப் பெயர் பெற்றார்

திருத்தூதர்கள் துன்பத்தினூடாக புனிதரானார்கள்
தலைகீழாக சிலுவையில் மரணித்த பேதுரு
தூக்கிலிடப்பட்டு மரித்த லூக்கா, ஈட்டியால் குத்தப்பட்ட
தோமா புடமிடப்பட்டு புனிதரானார்கள்

சீடத்துவ வாழ்வில் இன்னலுற்ற பவுல்
சிரச்சேதம் செய்யப்பட்டு மரணத்தை தழுவினார்
கொதிக்கும் எண்ணெயில் போடப்பட்ட யோவான்
கொலை செய்யப்பட்ட மாற்கு துன்பத்தினூடாக புனிதரானார்கள்

ஆட்டுக் குட்டியானவரின் (கிறிஸ்துவின்) இரத்தத்தில் தம்
ஆடைகளை வெண்மையாக்கியவர்கள் புனிதர்கள்
புடமிடப்பட்ட திருத்தாதர்களின் பெயர்கள்
புதிய எருசலேமின் வாயில்களில் பொறிக்கப்பட்டுள்ளது

ஆக்கம் : F.S. ஆஞ்சலீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்செபமாலைப் பேரணி

காலம் : 26.10.2019
நேரம் : காலை 7.00 மணி
**ஆரம்பிக்கும் இடம்** : புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயம்
குமபுறுப்பிட்டி
**முடிவடையும் இடம்** : புனித செபமாலை அன்னை ஆலயம்
குச்சவெளி

✞ செபமாலைப் பேரணி புனித செபமாலை அன்னை ஆலயத்தை வந்தடைந்ததும் எமது மறைமாநில ஆயர் பேரருட்திரு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

✞ நீலம் அல்லது வெள்ளை நிற ஆடை அணிந்து வருவது வரவேற்கத்தக்கது.


✞ அனைவரையும் இச்செபமாலைப் பேரணியில் கலந்து, மரியன்னையின் ஆசி பெற அன்புடன் வரவேற்கின்றோம்.

**ஒழுங்கமைப்பு - அருட்பணி இ. யூட் சர்வானந்தன்**
நிலாவெளி மறைக்கோட்ட முதல்வர்

# படித்ததில் பிடித்தது

**அருட்பணியாளர் T. கிங்ஸ்லி றொபட்**

## யுத்தம்




வரலாற்றுப் பாடவேளை.
'பானிப்பட்டு யுத்தம்' பற்றி
பாடம் நடத்திக் கொண்டிருந்தார் ஆசான்.

பாடம் நடத்திய ஆசானின் மகன் கண்ணனும்
அதே வகுப்பில் படித்தான்.
நடத்திய பாடத்தை சரிவர கவனிக்கவில்லை.
பாடத்தில் மனம் செல்லவில்லை.
சோகமாய் அமர்ந்திருந்தான்.

கவனித்த ஆசான் கேட்டார்:
'டேய் கண்ணா...
உனக்குத் தெரிந்த ஒரு யுத்தம் பற்றிச் சொல்லு...!'

'எனக்கு ஒரு யுத்தம் பற்றித் தெரியும். ஆனால்...
அதை வெளியே சொல்ல முடியாது. சொல்லவும் கூடாது.'

'ஏன் சொல்லக் கூடாது?
இது வரலாற்று வகுப்பு. சொல்லித்தான் ஆக வேண்டும்.
சொல்லாமல் விடமாட்டேன். சொல்லு.'

கண்டிப்பான கட்டளைக்குக் கட்டுப்பட்டான் மாணவன்.
பதில் சொன்னான்:

'அந்த மாபெரும் யுத்தம் என் வீட்டுக்குள்தான் நடக்கிறது.
வீட்டுக்குள் யுத்தமா?
ஆமாம். என் அப்பாவும் அம்மாவும்
ஆறு மாதங்களாகப் பேசிக் கொள்வதில்லை.
வீடே மயான களமாகக் காட்சி அளிக்கிறது.'

தொடர்ந்தான் ஆசானின் புத்திரன்:
'தற்கால வரலாற்றில் என் வீட்டில் நடப்பதோ
ஒரு மௌன யுத்தம்.'

*நிகழ்கால வரலாற்றில்*
*குழந்தைகளை அதிகம் பாதிப்பது*
*வரலாற்று யுத்தங்கள் அல்ல*
*வீட்டு யுத்தங்களே...!*

# ஆசிரியர்களின் மகத்துவம்



'ஓர் ஆசிரியர் ஆயிரம் துறவிகளுக்குச் சமம்' என்பார் இங்கர்சால். அற்றம் காக்கும் கருவியாம் அறிவுச் செல்வத்தை மாணவ சமுதாயத்திற்கு கற்றக் கொடுத்து இருளிலிருந்து ஒளிக்கும், அறியாமையிலிருந்து ஞானத்திற்கும் வழிநடத்திச் செல்பவர்கள் ஆசிரியப் பெருமக்கள். இவர்கள் பல்வேறு சமூகக் கலாச்சார பின்னனிகளிலிருந்து வரும் மாணவர்களை ஆளுமை, திறன் பெற்ற மாணவர்களாக 'குயவன் கையில் கிடைத்த களிமண் போல் வடித்தெடுக்கும் ஆசான்கள் உண்மையிலேயே ஆளுமை சிற்பிகள் என்று நான் உணர்கின்றேன்.

பாடசாலைகளில் முதல் பெற்றோராக இருந்து ஒரு மாணவரை முழு வளர்ச்சி பெற்ற மாணவராக உருவாக்குவது ஆசானின் முதல் கடமை. "ஆசு + இரியோர் = ஆசிரியர்" (குற்றத்தை களைவோர்) என இலக்கணம் உண்டு. ஓர் ஆசிரியர் தன்னிடம் கொடுக்கப்பட்ட மாணவரை தன் பிள்ளையாக, ஆளுமை சிற்பியாக, ஓர் ஓவியமாக, தூய்மையான மாமனிதனாக உருவாக்க தன் நேரத்தையும், காலங்களையும், திறமைகளையும் மறைத்து வைக்காமல் "வெள்ளிடை மலைபோல்" மாணவர்கள் வாழ்வில் பயணிக்கிறார்கள். ஆசிரியர்கள் ஓர் விவசாயியாக இருக்கிறார்கள். நம்பிக்கையுடன் விதைக்கிறார்கள்.

ஆசிரியர்களின் பணியானது உலகிலேயே மாபெரும் பணி. இவர்கள் அவநம்பிக்கைகள், தோல்விகள், சவால்கள், தடைகள் இவற்றை எல்லாம் கடந்து செல்வதற்கு ஓர் உலகம் பரந்து விரிந்திருக்கிறது என்ற நம்பிக்கை விதையை விதைக்கும் மகத்தான பணியே ஆசிரியப்பணி.

இவர்களின் மதிப்பீட்டுக் கல்வியே, நல்வாழ்வுக்கு அச்சாரம் என்பதையும் மாணவர்களின் உள்ளங்களில் பசுமரத்தாணி போல் பதிய வைப்பதும் ஆசிரியரின் சவால் நிறைந்த பணியாகும். ஒரு மாணவன் தடுமாறினால் அவனின் ஆளுமை திறனை வெளிக்காட்டி அவனை உருமாற்றுவது ஆசிரியர்களால் மட்டுமே முடியும் என்பதே உண்மை. இவர்கள் எப்போதும் அனைவருக்கும் வழிகாட்டும் ஒளி விளக்காக திகழ்பவர்கள். மாணவ சமூகத்திற்கு ஓர் முன்மாதிரிகை. நாம் சொல்வதை செய்கிறார்கள் இவர்களின் பண்பான நடத்தையில் அர்ப்பணிப்பு வாழ்வையும் முன்வைக்கிறார்கள். இவர்களே நல்ல ஆசிரியர்கள். ஆகவே தான் "அறியாமையிலிருந்து அறிவுலகிற்கு" என்ற பொருளுக்கேற்றவாறு திகழ்பவர்களே இந்த ஆசிரியர்கள்.

களிமண்ணாகிய மாணவனை குயவனாகிய ஆசிரியர் நாளைய நாள் ஒவ்வொரு மாணவன் கையில் என்பதை எண்ணியவாறு அவன் அவன் திறமைக்கும் ஆளுமைக்கும் ஏற்றவகையில் உருவாக்க பிரசவ வேதனையுற்று ஒவ்வொரு மாணவனையும் படைப்பாளிகளாகப் பெற்றெடுத்து ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்குகின்றார்கள். புதியதோர் சமுதாயம் படைக்கும் நம்பிக்கையும் நல்லுணர்வுகளையும் கொடுக்க அயராது உழைப்பவர்களும் இவர்களே.

ஆசிரியர்களே இவ்வுலகத்தின் அளவுதிறனையும் என்னுடைய ஆளுமை திறனையும் கற்றுக் கொள்ளவும் கற்றுக் கொடுக்கவும் கற்றுக் கொடுத்தார்கள் என்பது மிகையாகாது. மானிட உடல் மற்றும் உள்ளம் இணைந்த வளர்ச்சிக்கு எவையெல்லாம் தடையென்றிருந்ததோ அவற்றை எல்லாம் தூக்கியெறியும் ஆற்றலைக் கொடுத்ததும் ஆசிரியர்களின் கல்வி முறையே, என்றும் சமூக வளர்ச்சிக்கு கல்வியும் தேவை. அதனை உரு கொடுக்கும் ஆசிரியர்களும் தேவை.

உழைப்பு இல்லாத செல்வம்
மனசாட்சி இல்லாத மகிழ்ச்சி
குணநலன் இல்லாத அறிவு
மனிதாபிமானம் இல்லாத அறிவியல்
தியாகம் இல்லாத வழிபாடு.....

இதை காந்தியடிகளார் கூறி ஆசிரியர் பணியெனும் தூய்மையான பணி என்று உலகிற்கு ஒப்புவித்தார். செதுக்கி ஓவியமாகவோ காவியமாகவோ புத்துலகம் படைக்கும் பணி. உலகிலேயே ஆசிரியர்களையே சேரும் என்று சொல்லி எமது வாழ்வில் கலந்திட்ட ஆசிரியர்களை நினைத்து வாழ்த்துக்கள் சொல்வோம். அவர்களின் பணி இயேசுவைப் போன்று அவருடன் இணைந்து உலகின் கடைசி எல்லை வரை ஒவ்வொரு மாணவ மணிகளையும் உருவாக்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

**K. சுபா**

## மனம் வருந்துகிறோம்

சென்ற இதழில் வெளியாகிய **'மறையாசிரியரின் பண்புகள்'** எனும் ஆக்கத்தை எழுதியவரின் பெயர் குறிப்பிடப்படவில்லை. தவறுக்கு மனம் வருந்துகிறோம்.

ஆக்கம் : K. ஜெசிந்தா
ஓய்வுநிலை சே. ஆ. ஆலோசகர்
குவாடலூப்பே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கல்வி வாரமும் தேசிய மறைக்கல்வி தின நிஜங்களும் நிகழ்வுகளும் - 2019



புனித மரியாள் பேராலயம்







இருதய ஆண்டவர் ஆலயம்

தேசிய மறைக்கல்வி தினமும், மறைக்கல்வி வாரமும் 09.09.2019 தொடக்கம் 15.09.2019 வரை திருகோணமலை மறைமாவட்ட அனைத்து பங்குகளிலும் சிறப்பிக்கப்பட்டது.







புனித சதாசகாய அன்னை ஆலயம்







புனித லூர்து அன்னை திருத்தலம்,

# திருமுழுக்கு மூலம் அழைப்பு பெறுகிறோம்



திருமுழுக்கு பெற்றோரும் அனுப்பப்பட்டோரும்



யோர்தான் நதியில் பெற்ற திருமுழுக்கோடு, புத்திரத் தன்மையை முழுமையாக கிறிஸ்து உரிமையாக்கிக் கொண்டார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற தேவையான வல்லமையை தூய ஆவியானவரிடமிருந்து பெற்றுக்கொண்டார். பாலைவனத்துக்கு எடுத்துச்சென்ற வேளையில் தந்தையின் அன்பில் நிரம்புவதற்கும், சோதனைகளை வெற்றிகொள்வதற்கும் உதவியவர் துணையாளரான தூய ஆவியே.

யோவான் தண்ணீரினால் திருமுழுக்குக் கொடுத்தார். நீங்களோ இன்னும் சில நாட்களில் பரிசுத்த ஆவியால் திருமுழுக்குப் பெறுவீர்கள் என்று (தி.தூ.ப 1:5) தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தன்னோடு இருந்த சீடருக்கும் துணையாளரை அனுப்புவதாகக் கூறுகிறார். அத்துடன் அவர்களை முன்கூட்டியே ஆயத்தப்படுத்துகிறார். தூய ஆவியின் வல்லமையை அனுபவித்து, அந்த வல்லமையில் நிரம்பி சான்று பகருங்கள் என நம்மை பரிசுத்த ஆவியினால் திருமுழுக்கு பெற்ற நம் ஒவ்வொருவருக்கும் அழைப்பு விடுக்கிறார்.

இயேசு ஆண்டவர் விட்டுச் சென்ற தூதுரைப் பணியில் தொடர்ந்து செய்வதற்காகவே பலர் மத்தியில், திருமுழுக்கு எனும் அருட்சாதனத்தின் மூலம், தூய ஆவியாரின் இணைப்பின் மூலம் புதுவாழ்வு, புதுமலர்ச்சி பெற்ற வாழ்வு கொண்ட சிலரை, தம் விண்ணரசு அறிவிப்புப் பணியினைத் தொடர அழைப்பு விடுக்கிறார்.

"கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிறவர்களே கடவுளின் மக்கள்" என (உரோ 8:14) கூறப்பட்டிருக்கிறது. திருமுழுக்கு பெற்று அப்பா தந்தையே என அழைக்கும் உரிமைப் பேறு பெற்ற நாம் ஆவியானவரால் வழிநடத்தப்படும் மக்கள் இவர்கள் தான். எனது, எனக்கு என்ற நிலையைக் கைவிட்டு நாம், எமது, எமக்கு என்ற நிலையிலிருந்தவாறு பதிலளிக்கின்றனர். (தி.தூ.ப 2:42-47)

இயேசுவை மறுதலித்த பேதுருவானவர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட பின் இவரே அன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை என ஆணித்தரமாக எடுத்துக்கூறி சான்று பகருகிறார். அவரும் திரு அவையின் முதன் முதல் தலைவர் என அழைக்கப்பட்டார். காரணம் அவர் பெற்றது தூய ஆவி திருமுழுக்கு.

2000 வருடங்கள் முன்னோக்கி பார்த்தோமானால் பெந்தக்கோஸ்து திருவிழாவின் போது இயேசுவின் சீடர்கள் தூய ஆவியால் நிறைந்தவர்களாய் உலகின் கடையெல்லை வரை இறைதூதுப்பணியை அறிவித்து தம் நிறைவான பணியை உலகிற்குத் தர முடியுமானதாய் இருந்தது. மரியாளும் எலிசபெத்தும் சிறப்பான தாய்மார்கள். இருவருமே தம் அழைப்பினை ஏற்று ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு விசுவாச வாழ்வு வாழ்ந்தார்கள். திருமுழுக்கின் மூலம் இறைவனுக்கு அர்ப்பணமான எம்மை பார்த்து தந்தை என்னை அனுப்பியது போல் உங்களையும் அனுப்புகின்றேன் என அழைப்பு விடுக்கிறார் (யோ 20:19-23)

இறையரசின் மகனாக மகளாக திருமுழுக்குப் பெற்ற நாம் இறையரசிற்காக எமக்கு கொடுத்த பணியைச் சரிவரச் செய்கின்றோமா? கணத்திற்கு கணம் தூய ஆவியாருக்கு விழிப்புற்று எமக்களித்த பொறுப்புக்களால் ஆண்டவரை மகிமைப்படுத்தி இறை சாட்சியாளர்களாக வாழ முன்வருவோமா? தூய ஆவியாரின் விசேட திருமுழுக்கைப் பெற்றுக் கொண்ட நாம் சீடத்துவ மக்களாக தேர்ந்து கொள்ளப்பட்ட நாம் அவருடைய சகல வரங்களையும் இறையரசின் வளர்ச்சிக்குப் பாவிக்கும் தூதனாக, பணியாளனாக வாழ முன்வருவோமா? முன்வருவோம்.

ஏனெனில் அவர் தம் கனிகளை இலவசமாகத் தந்துள்ளார். விண்ணரசுப் பணிக்காக மீண்டும் மீண்டும் எம்மை அழைக்கின்றார். திருமுழுக்கு பெற்று அதன் மூலம் தூய ஆவியாரோடு அர்ப்பணமான எம்மை பார்த்து "தந்தை என்னை அனுப்பியது போல் உங்களையும் அனுப்புகின்றேன்". யோவான் 20:19-23ல் அழைப்பு விடுக்கின்றார்.

திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருமே நற்செய்தியை அறிவிக்கும் தூதுவர்கள். கடவுள் தான் குறித்து வைத்தோரை அழைத்திருக்கின்றார். (உரோ-8:30) ஆண்டவரின் அழைப்பு ஒவ்வொருவருடைய திறமையைப் பார்த்தோ அந்தஸ்தைப் பார்த்தோ வருவதில்லை மாறாக கடவுளின் இரக்கத்திற்கு ஏற்ப அவரின் திட்டத்திற்கு ஏற்ப கொடையாக வழங்கப்படுகிறது. அதனைத்தான் எசாயா இறைவாக்கினர் கருப்பையில் இருக்கும் போதே ஆண்டவர் என்னை அழைத்தார் எசா49:1 எனக் கூறுகிறார்.

நாம் மறுபடியும் பிறப்போம். தண்ணீரால் நாம் பெற்ற திருமுழுக்கு உடல் சார்ந்தது. தூய ஆவியால் பிறப்பது என்பது உள்ளம் சார்ந்தது. ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று இயேசு நிக்கோதேமைப் பார்த்துக் கூறுகிறார். இப்படிப்பட்ட மறுபிறப்பினை ஏற்று இறைவனின் அழைத்தலை உணர்வோம்.

ஆன் ஜெரின்
ஊக்குவிப்பாளர்,
திருத்தந்தையின் மறைபரப்பு சபைகள்,
திருகோணமலை

## மறை ஆசானுக்கு....................
## ஆசிரிய தின நல்வாழ்த்துக்கள்

அன்பென்னும் கரம் பற்றி
அருள் என்னும் கொடை விளக்கி
இறைவழி செல்லும் மறை அறிவை
எமக்கருளும் மறைஆசானே........

இறை அறிவை நாம் பெற்று
இறைவனையே கரம் பற்ற
இனிய பல கதைகள் மூலம்
இதமாய் புகட்டும் மறை ஆசானே.......




நல்லுரைகள் பல உரைத்து
நல்லவை பல நாம் செய்திட
நல்வழி காட்டும் மறை ஆசானே
வாழ்த்துகின்றேன் இன்று உம்மை

டிலுக்ஷியா ஜோயல் ஜிப்சன்
தரம் - 08
புனித மரியாள் பேராலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்லும் பாதைகள் எங்கே....

அருட்பணி N.C. அருள்வரதன்



அமைதியின் நிலைகள் காண
ஆற்றிடும் பணிகள் மேலாகுமே
உயர்வான சிந்தனைகளே
உள்ளத்தை வளப்படுத்தும்
நல்ல சிந்தனைகள் உயர்ந்து செல்லவே
நலமான நிலைகளே விளைவுகளாகுமே

தீமைகளும் தீவினைகளாலே
நன்மைகளைக் காணவே முடியாதே
பொன்னான வாழ்வினைக் காண வேண்டுமானால்
நன்மைகளை நாம் நாடிச் சென்றே எங்கும்
நாம் பணிகள் ஆற்றும் போது விளைவு
உண்மையில் நமக்கு நிறைவு தான் அங்கே



நல்வழிப்பாதைகளை நாம் தெரிந்தே
நாமே தொடர்ந்து செல்ல வேண்டும்
கடினங்கள் நிறைந்த பாதைகளே
காட்டுமே நமக்கு விடிவுகளை
பாவத்தில் நமை வீழ்த்தும் பாதைகளோ
இடரேதுமில்லாத இலகுவான பாதைகளாம்

கடினமாம் பாதைகள் என்றாலும்
கடவுள் காட்டிய வழியதனை
கடந்து நாங்கள் தொடர்ந்து செல்ல
வெற்றியே நமக்கு விளைவாகும்
மறவாமல் இதனை உணர்ந்து கொண்டே
மனத்துணிவோடு நடப்போமே

## குட்டிக்கதை ஒன்று

Fr. N.C



குருமட மாணவர் ஒருவர் அவருக்கு அன்று பட்டமளிப்பு ஏகப்பட்ட சனக்கூட்டம். பலரும் பலவிதமான பரிசுப் பொருட்களுடன் வந்திருந்தார்கள்.

பட்டம் பெற இருந்தவருக்கு பலவிதமான சிந்தனைகள். அவர்தான் கடந்து வந்த பாதைகளை இரைமீட்டிப் பார்க்கிறார்.

எத்தனை கடினங்கள், எத்தனை சவால்கள், எத்தனை தடைகள் எல்லாவற்றையும் கடந்து வெற்றி கண்டது அளவிட முடியாத மகிழ்ச்சியாக இருந்தது.

இருந்தாலும் அவரது மனதிலே பதிந்து விட்ட வார்த்தை அது வேறொன்றுமல்ல. இயேசு கூறிய 'என்னைப் பின் செல்ல இருப்பவர் தன்னையே மறுத்து தன் நாளாந்த சிலுவையைச் சுமந்து கொண்டு என்னைப் பின் தொடரட்டும். அதுவும் ஒடுக்கமான வாயில் வழியாக'.

அவருக்கு தன் சுமைகளை சுமந்து வெற்றி கண்டிருப்பது அவருக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்பது உண்மையல்லவா!

# அன்றாட வாழ்வில் தத்துவங்கள்



## 08. விவேகமும் வினைத்திறனும்

விவேகம் என்பதற்கு ஞானம், சிறந்த அறிவு என்ற பல பெயர்களுண்டு. தெரிந்ததைத் தெரியாததிலிருந்து பிரிக்கும். அறிய வேண்டியதை அறியும், செய்யத்தக்க செயல்களைச் செய்யும். அதுவே விவேகம் என்கிறார் கொன்பியூசியஸ். ஒவ்வொரு நாளும் பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அவைகளை முன்னமே அறியும் அறிவே விவேகம் என்கிறார் மில்டன்.

ஒரு மனிதன் தான் செய்யும் செயலை எப்போது செய்வது? எப்படி செய்வது? எங்கே செய்வது? ஏன் செய்கிறோம்? என்று முதலில் சிந்திக்க வேண்டும். அந்த அறிவே விவேகம் எனப்படும். விவேகிகளுக்கு மதிநுட்பம் வேண்டும். முன்யோசனை வேண்டும். முன்எச்சரிக்கை வேண்டும்.

ஒருவனின் உள்ளத்தை அவன் கூறாமலே விளங்கிக் கொள்ள வேண்டும். அதை அவனது புறச் செயல்களில் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த ஆற்றலுள்ள அறிவே மதிநுட்பம் எனப்படும். மதிநுட்பம் இல்லாதவன் ஒரு சொல்லின் உண்மையை அறியாத முட்டாளாகிறான். அதனால் எல்லோரையும் ஒன்று போல் நினைக்கின்றான். ஏமாந்து போகின்றான்.

அறிய வேண்டியதை முன்னமே அறிய வேண்டும். பின்னால் என்ன நடக்கும் என்பதை முன்னமே யோசிக்க வேண்டும். ஒவ்வொரு நாள் வாழ்விலும் நடக்கவிருப்பவைகளை முன்கூட்டியே அறியும் அறிவே முன்யோசனை எனப்படுகிறது. பழக்கமில்லாத நீரோடையைக் கடப்பது அறிவன்று. அதன் ஆழம் என்ன? நீரின் இழுவைத் தன்மை எப்படி? திடீர் வெள்ளம் அந்த ஓடையில் வருமா? என்ற முன்னமே விசாரிக்க வேண்டும். அதன் பின்னர் தான் ஓடையில் கால் வைக்க வேண்டும். முன் யோசனை இல்லாது ஆழம் தெரியாமல் காலை விட்டால் அவனது உயிர் அத்தோடு முடிந்தும் போகலாம்.

மின் கம்பங்களின் மேல் ஏறி வேலை செய்யும் ஊழியர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அப்பகுதியில் மின்தடை ஏற்படுத்த வேண்டும். கைகளில் இறப்பர் உறை அணிந்திருக்க வேண்டும். இந்த எச்சரிக்கையுடன் பணி செய்யாதவருக்கு ஆபத்த ஏற்படுகிறது. முன் எச்சரிக்கையோடு நடந்து கொள்வது எமக்கு பல விதங்களில் உதவுகிறது. தீமை இதுவென்று அறிவு சொல்லுகிறது. அதனால் உனக்கு ஆபத்து. வாழ்க்கைக்குப் பயன் இல்லை. விலகிக் கொள் என்று எச்சரிக்கிறது. இந்த எச்சரிக்கையின்படி செயலாற்றுவதே முன் எச்சரிக்கை எனப்படும்.

சாமர்த்தியமும் தந்திரமும் விவேகத்தின் நண்பர்கள் எனலாம். பலர் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்குக் காரணம் அவர்கள் பேச்சின் சாமர்த்தியமே. எதிரிகளை வெல்வதற்கு வேண்டிய திறமைகள் தேவை அது சாமர்த்தியமே. அவன் சூழ்நிலைக்கேற்ப அறிவுடனும் ஆற்றலுடனும் கண்டிப்புடனும் நடக்கிறான். முன்னிலைப் பொருளை நிதானித்து அதற்கேற்றவாறு செயற்படுகிறான்.

விவேகிகளின் வெற்றி அவர்களது தந்திரச் செயலில் அடங்கியுள்ளது. எதிரிகளின் ஆபத்துக்களிலிருந்து தப்பித்துக் கொள்ள இராணுவத்தில் பல தந்திர முறைகள் கற்பிக்கப்படுகின்றன. ஒருவனை வஞ்சனை செய்து இலாபம் பெறுவது தந்திரமாகாது. அது வஞ்சகரின் தொழில். அறிவற்றவனிடம் செயலை முடிப்பது தந்திரமன்று. அது மோசக்காரனின் வேலை அப்பாவியிடம் காரியத்தைக் கைப்பற்றுவது தந்திரமன்று. அது கோழையின் செயல்.

வினைத்திறன் என்பது ஒரு செயலைச் செய்யுமுன் அச்செயலின் தன்மையையும் அதன் விளைவுகளையும் அறிந்து அதை எப்போது எங்கே எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்து முடிப்பதுமாகும்.

**சிந்தனைக்கு.........**

உன்னைப் பரிசோதித்துப் பார்க்கும் உரைகல்
உனது மனச்சாட்சியே

தீய இதயமுள்ளோன் நன்மையைக் காணான். இரு பொருளுள்ள வார்த்தைகளைப் பேசுகிறவன் தீமையில் சிக்கிக் கொள்வான் (விவிலியம் - பழமொழி : 17:20 )

**தொடரும்..........**

**நன்றி.**

## சிந்திக்க....... சிரிக்க...........

கணவர் : கூட்டு பிரமாதம், அடடே பொரியல் அற்புதம், சாம்பார் சுவையோ சுவை
மனைவி : போதும் தற்பெருமையை நிறுத்திட்டு சாப்பிடுங்க



மலையைப் பார்த்து
மலைத்து விடாதே
மலை மேல் ஏறினால்
அதுவும் உன் காலடிக்கு
கீழே தான்




வெற்றி வந்தால் பணிவு அவசியம்
தோல்வி வந்தால் பொறுமை அவசியம்
எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம்
எது வந்தாலும் நம்பிக்கை அவசியம்

குத்துவிளக்கைப் போல் பெண்ணைத்
தேடுகிறான் ஆண்
அலாவுதீன் விளக்கைப் போல்
ஆணைத் தேடுகிறாள் பெண்

100 திருமணமான ஆண்கள் கூட்டத்தில் 'பொண்டாட்டியிடம் அடி வாங்கியவர்கள் கை தூக்குங்கள்' என்று கேட்கப்பட்டது. எல்லோரும் தூக்கினார்கள். ஆனால் ஒரேயொரு நபர் மட்டும் தூக்கவில்லை அவரைக் கூப்பிட்டு உங்கள் மனைவி மிகவும் அனுசரணையானவர் போலும் எனக் கூறினார் அதற்கு அவர், போங்க சார் சும்மா வயித்தெரிச்சல கிளப்பாம நேத்து வாங்கின அடில கைய கூட தூக்க முடியல சார்.

நேற்று செய்ய வேண்டியதை இன்று
செய்தால் சோம்பேறி
இன்று செய்ய வேண்டியதை இன்றே
செய்தால் சுறுசுறுப்பானவர்
நாளை செய்ய வேண்டியதை
இன்றே செய்தால் வெற்றியாளர்



இந்த உலகமே உன்னை
திரும்பி பார்க்க
வேண்டுமென்றால் நீ
யாரையுமே திரும்பி
பார்க்காதே
- ஹிட்லர்

போன மாசம் 45கிலோ தான் இருந்தன்
இந்த மாசம் 50கிலோ ஆகிட்டேன்.
ஆனா போட்டு இருக்கிற பான்ட் சைசும்
மாறல சேட் சைசும் மாறல
அப்போ கண்டிப்பா மூள தான்
வளந்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலிய வாசிப்பு - 201 9

| கார்த்திகை 2019 | | |
|---|---|---|
| இணைச்சட்டம் | லூக்கா | நீதிமொழிகள் |
| 01) 28:1-14 | 9:51-56 | 12:15-17 |
| 02) 28:15-68 | 9:57-62 | 12:18 |
| 03) 29:1-29 | 10:1-12 | 12:19-20 |
| 04) 30:1-20 | 10:13-16 | 12:21-23 |
| 05) 31:1-13 | 10:17-20 | 12:24 |
| 06) 31:14-29 | 10:21-24 | 12:25 |
| 07) 31:30-32:44 | 10:25-37 | 12:26 |
| 08) 32:45-52 | 10:38-42 | 12:27-28 |
| 09) 33:1-29 | 11:1-13 | 13:1 |
| 10) 34:1-12 | 11:14-23 | 13:2-3 |
| யோசுவா | லூக்கா | நீதிமொழிகள் |
| 11) 1:1-18 | 11:24-26 | 13:4 |
| 12) 2:1-24 | 11:27-28 | 13:5-6 |
| 13) 3:1-17 | 11:29-32 | 13:7-8 |
| 14) 4:1-5:1 | 11:33-36 | 13:9-10 |
| 15) 5:2-15 | 11:37-54 | 13:11 |
| 16) 6:1-27 | 12:1-7 | 13:12-14 |
| 17) 7:1-26 | 12:8-12 | 13:15-16 |
| 18) 8:1-29 | 12:13-21 | 13:17-19 |
| 19) 8:30-35 | 12:22-34 | 13:20-23 |
| 20) 9:1-27 | 12:35-48 | 13:24-25 |
| 21) 10:1-43 | 12:49-53 | 14:1-2 |
| 22) 11:1-23 | 12:54-56 | 14:3-4 |
| 23) 12:1-24 | 12:57-58 | 14:5-6 |
| 24) 13:1-14 | 13:1-5 | 14:7-8 |
| 25) 13:15-33 | 13:6-9 | 14:9-10 |
| 26) 14:1-15 | 13:10-17 | 14:11-12 |
| 27) 15:1-19 | 13:18-21 | 14:13-14 |
| 28) 15:20-63 | 13:22-30 | 14:15-16 |
| 29) 16:1-10 | 13:31-35 | 14:17-19 |
| 30) 17:1-18 | 14:1-6 | 14:20-21 |

"உமக்கெதிராய் நான் பாவம் செய்யாதவாறு உமது வாக்கை என் இதயத்தில் இருத்தியுள்ளேன்"
(திபா 119:11)



| மார்கழி 2019 | | |
|---|---|---|
| யோசுவா | லூக்கா | நீதிமொழிகள் |
| 01) 18:1-28 | 14:7-14 | 14:22-24 |
| 02) 19:1-16 | 14:15-24 | 14:25 |
| 03) 19:17-31 | 14:25-33 | 14:26-27 |
| 04) 19:32-51 | 14:34-35 | 14:28-29 |
| 05) 20:1-9 | 15:1-7 | 14:30-31 |
| 06) 21:1-45 | 15:8-10 | 14:32-33 |
| 07) 22:1-9 | 15:11-32 | 14:34-35 |
| 08) 22:10-34 | 16:1-13 | 15:1-3 |
| 09) 23:1-16 | 16:14-18 | 15:4 |
| 10) 24:1-28 | 16:19-31 | 15:5-7 |
| 11) 24:29-33 | 17:1-10 | 15:8-10 |
| நீதித்தலைவர்கள் | லூக்கா | நீதிமொழிகள் |
| 12) 1:1-15 | 17:11-19 | 15:11 |
| 13) 1:16-36 | 17:20-37 | 15:12-14 |
| 14) 2:1-10 | 18:1-8 | 15:115-17 |
| 15) 2:11-23 | 18:9-14 | 15:18-19 |
| 16) 3:1-11 | 18:15-17 | 15:20-21 |
| 17) 3:12-31 | 18:18-30 | 15:22-23 |
| 18) 4:1-24 | 18:31-34 | 15:24-26 |
| 19) 5:1-31 | 18:35-43 | 15:27-28 |
| 20) 6:1-40 | 19:1-10 | 15:29-30 |
| 21) 7:1-25 | 19:11-27 | 15:31-32 |
| 22) 8:1-35 | 19:28-44 | 15:33 |
| 23) 9:1-52 | 19:45-48 | 16:1-3 |
| 24) 10:1-5 | 20:1-8 | 16:4-5 |
| 25) 10:6-11:33 | 20:9-19 | 16:6-7 |
| 26) 11:34-40 | 20:20-26 | 16:8-9 |
| 27) 12:1-15 | 20:27-40 | 16:10-11 |
| 28) 13:1-25 | 20:41-44 | 16:12-13 |
| 29) 14:1-15:8 | 20:45-47 | 16:14-15 |
| 30) 15:9-20 | 21:1-4 | 16:16-17 |
| 31) 16:1-31 | 21:5-6 | 16:18 |

"ஆண்டவரின் வாக்கு நேர்மையானது"
(திபா 33:4)



# நவீன உலகில் சிறுவர்களின் மாண்பு



மனிதர்களின் மாண்பை உணர்ந்து கொள்வது சமூக, அரசியல் மனித உரிமைகளின் அடிப்படையாகும். எனவே திரு அவையும் மனித உரிமைகளின் மைல் கல்லாக மனித மாண்பை வலியுறுத்தி நிற்கின்றது. அதனால் இவ்வகை மனித மாண்பில் சிறுவர்கள், குழந்தைகள் பற்றிய கவனம் முதன்மையானதாகவும் அவசியமானதாகவும் உள்ளது. காரணம் என்னவெனில் இளையவர்களின் பாதுகாப்பும், கவனிப்பும் எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் உண்மையான நிலை இவற்றை தெளிவாக உணர்ந்தால் சிறுவர் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பில் கடமையாற்றுவதில் எவ்வித இடர்பாடுகள் எம்மில் ஏற்படாது. மேலும் இவ் உன்னத செயலுக்காக நாம் முயற்சிகள் எடுப்போம்.

ஆணும் பெண்ணும் இறைவனின் உருவில் படைக்கப்பட்டனர் என இறைவார்த்தை கூறுகின்றது. இதை விட மேலாக மனித மேன்மையை உணர்த்த முடியுமா? மேலும் நற்செய்தியில் இயேசு சிறுவர்களைக் குறித்து போதிக்கும் போது அவர் குழந்தைகளை அரவணைத்து சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள் ஏனெனில் விண்ணரசு இத்தகையோருக்கே உரியது என்றார். பிறகு அவர் அவர்களை அரவணைத்து, தம் கைகளை அவர்கள் மேல் வைத்து ஆசி வழங்கினார். மேலும் அவர் என்மீது நம்பிக்கை கொண்டுள்ள இச்சிறியோருள் எவரையாவது பாவத்தில் விழச்செய்வோருடைய கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டித் தொங்கவிட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது அவர்களுக்கு நல்லது எனக் கூறுகிறார். இவ்வாறாக இறைவார்த்தைப் பகுதிகள் குழந்தைகள், சிறுவர்களின் மாண்பைப் பற்றி கூறுகின்றது என்றால் எங்களால் அதனை மறுக்க முடியுமா?

நவீன உலகில் நாம் வாழ்வதும், எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதும் இன்றைய மக்களின் தவிர்க்க முடியாத நிலை இதை எவராலும் மறுக்க முடியாது விஞ்ஞான வளர்ச்சியிலும் தொழிநுட்ப வீரியத்திலும் சிக்குண்டுள்ள நாம் நவீன உலகின் கோரிக்கைகளை நிறைவேற்றத்தான் வேண்டும் எங்களுடைய தொடர்பாடல்களும் எம் வாழ்க்கை முறையும் நவீன உலகிற்கு ஏற்ப மாறிவிட்டது. இவ்வாறு எல்லாம் மாறும் போது மனித மாண்பும் மாறவேண்டுமா? இல்லை அன்றிலிருந்து இன்றுவரை என்றும் மாறாதது மனித மாண்பு, இதை நாம் எவ்வாறு மறந்தோம். இவ்வாறான நிலையில் உண்மையான சில விடயங்களை நாம் மறந்து விடக்கூடாது இன்றைய சூழ் நிலையில் சிறுவர்களின் மழலையை தொலைத்து சிலர் கொத்தடிமைகளாகவும், வீட்டுவன்முறைகளால் துன்பப்படுபவர்களாயும், கயவர்களுக்குள் சிக்குண்டு சிறுவர்கள் சீரழிக்கப்படுபவர்களாயும் இருக்கின்றனர். பெற்ற தாய் குழந்தையை கிணற்றில் எறிவதும், தந்தை மண்வெட்டியால் கொத்தி கொலை செய்வதும், மாமா, மச்சான் தம் பெண்குழந்தையை பாலியல் பலாத்காரம் செய்வதும் அறைக்குள் நாய் கூட்டுக்குள் அடைக்கப்பட்டு துன்புறுத்துவதும் எரியும் விறகுக் கட்டையால் சூடு வைப்பதுமான கீழ்த்தரமான செயல்கள் எங்கள் சமுதாயத்தில் நிகழ்ந்த வண்ணமே உள்ளன. இதுவே இன்றைய சிறுவர்களின் மாண்பிற்கு ஏற்பட்டுள்ள பரிதாப நிலை இதன்போது இப் பாடல் வரிகள் தான் என் நினைவுக்கு வருகின்றது.

ஐந்து வயது பிஞ்சுப் பெண்ணை
நசுக்கும் காமுகன் இங்குண்டு
அரை குறை ஆடைகாரணமாக - அந்த
சிசுவையும் சேலையில் மூடனுமா
தன் மனக்கவலையை உன்னிடம் திணிக்கும்
தந்திர உலகம் இது கவனி
ஆணுக்கு தாய்ப்பால் சுரந்திடும் காம்பில்
உனக்கு கள்ளிப் பால் கசிந்திடும் கண்மணி

மேலே கூறியவற்றை நாம் பார்க்கும் போதோ கேட்கும் போதோ அல்லது வாசிக்கும் போதோ எமக்கு கோபம் வருகிறது. ஆனால் எம் குடும்பங்களில் இவை போன்று அல்லது சிறிய சிறிய வன்முறைகள் சிறுவர்களுக்கு எதிராக நடைபெறும் போது ஏன் எம்மால் கண்டு கொள்ள முடியாமல் போய்விடுகிறது. குழந்தைகளை தகாத வார்த்தைகளால் திட்டுவது, தண்டனை என்ற பெயரில் கொடூரமாக நடந்து கொள்வது, பலருக்கு முன்பாக சிறுவர்களைப் பற்றிக் குறை கூறுவது, மற்ற பிள்ளைகளுடன் ஒப்பிட்டு வஞ்சிப்பது, ஏளனமாக கதைப்பது என சிறுசிறு விடயங்களை நாம் கண்டுகொள்ளாமல் விட்டுவிடுகிறோம். இவையும் ஒரு விதத்தில் சிறுவர் உரிமையை மீறும் செயல்கள் தான்.

இன்றைய உலகை பொறுத்த வரையில் வளர்ந்தவர்கள், அதிகாரம் படைத்தவர்கள் ஆழும் உலகமாகவே உள்ளது. அதனால் சிறுவர்கள், குழந்தைகளுக்கு ஓர் உலகம் உண்டு என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர். 'குழந்தைகள் உங்கள் மூலமாக வந்தவர்களே ஒழிய உங்களுக்காகவே வந்தவர்கள் அல்ல' என்று ஒரு அற்புதமான வரி உண்டு. ஏனென்றால் எங்களுடைய உலகத்தை அவர்கள் மேல் திணிக்கக் கூடாது. அவர்களுக்கும் ஓர் உலகம் உண்டு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். சில விடயங்களை நாம் தெளிவாக்கிக் கொள்ள வேண்டும். என்னவெனில் சொல் பேச்சைக் கேட்கும் பிள்ளைகள் நல்ல பிள்ளைகள் என பெற்றோர் நினைப்பது நல்ல விடயம் தான். ஆனால் பிள்ளைகள் பெரியவர்களாய் வரும்போது சுயபுத்தியில் செயல்பட வேண்டியவர்களாக இருக்கவும் வேண்டும் என்பதை சிலர் மறந்து விடுகின்றனர்.

ஒரு குழந்தை நாகரீகம் என்ற பெயரில் கட்டமைக்கப்பட்டுள்ள நகரம் சார்ந்த கட்டமைப்புக்குள் வரவேண்டும் என வற்புறுத்துவதும் சிறுவர் உரிமை மீறுதலே, ஒரு குழந்தை அவ் அவ் வயதுக்கேற்ப நியாயமான குறும்புகளை செய்ய அனுமதிக்காமையும் ஒரு விதத்தில் சிறுவர் உரிமை மீறுதலே. வெளிப்படையாக அழ வாய்ப்பளிக்காமையும் ஒரு உரிமை மீறுதலே. எனவே இவ்வாறு பல கோணங்களில் நாம் நோக்க முடியும்.

எனவே இன்று சிறுவர்களின் மாண்பை காப்பாற்றுவதற்கும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்கவும், கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுக்கவும் நாம் செய்ய வேண்டியவை என்ன? கடவுளின் பிள்ளைகள் சிறுவர்கள் எனவும், எதிர்கால சமுதாயம் அவர்கள் கையில் உள்ளது என விழிப்புணர்வை அளித்து வளர்க்க வேண்டும்.

- ◆ வயதுக்கேற்ற பாலியல் கல்வி முறையை ஆசிரியர்கள் பெற்றோர் தகுந்த முறையில் கொடுக்க வேண்டும்.
- ◆ சிறுவர்களுடன் உள்ள உறவுகளை வளர்த்தெடுக்க நேரம் செலவழிக்க பெற்றோர் முன்வர வேண்டும்.
- ◆ உடல் செய்கைகள், தொடுகை பற்றிய அறிவினை பெற்றோர் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும்.
- ◆ தகாத முறையில் குழந்தைகளை தீண்டும் போது அவ்விடத்தை விட்டு ஓடிச் செல்லவோ அல்லது சத்தமிடவோ கற்றுக் கொடுக்க வேண்டும்.
- ◆ குழந்தைகளுடன் பழகுபவர்கள் பற்றி பெற்றோர் அறிந்திருக்க வேண்டும்.
- ◆ சிறுவர்களின் குரலுக்கு விமடுக்கவும், சிறுவர்கள் சுதந்திரமாக கதைக்கக் கூடிய வாய்ப்பை பெற்றோர் கொடுக்க வேண்டும்.

எனவே இவ்வாறாக சில விடயங்களை நாம் கடைப்பிடித்தால் சிறுவர்களின் மாண்பை இந் நவீன உலகில் கொண்டு வர முடியும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. சிறுவர்களை காப்போம், மனிதத்தை மதிப்போம். சிறுவர் தினத்தில் மட்டும் சிறுவர்களை பற்றி எண்ணாமல் ஒவ்வொரு தினமும் அவர்கள் வாழ்வு வளம் பெற முயற்சி செய்வோம்.

அருட்சகோ. எமர்சன் றாகல்
இறையியல் பீடம்,
கண்டி தேசிய குருமடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுக நல சேவையில் 90 ஆவது அகவைக்குள் காலடி எடுத்து வைக்கும் இலங்கை திருச்சிலுவைக் கன்னியர்

புரட்டாதி 14ம் திகதி எம் தாய்த் திருஅவையானது திருச்சிலுவையின் மகிமையை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றது. திருச்சிலுவைக் கன்னியர்களாகிய எமக்கு அந்நாள் மகிழ்ச்சியான நாள். அன்று எமது சபையின் திருநாள். இவ்வருடம் அதிலும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மகிழ்ச்சியான நாள். திருச்சிலுவையின் மகிமையோடு, வரலாற்றில் இடம் பெற்ற இரண்டு முக்கிய நிகழ்வுகளை நாம் கொண்டாடுகின்றோம். அதாவது,

சர்வதேச ரீதியாக எமது சபை சுவிற்ஸ்சர்லாந்தில் ஸ்தாபிக்கப்பட்ட 175ஆவது ஆண்டையும், இலங்கையில் எமது சபை சுகநல சேவையில் 90ஆவது ஆண்டுக்குள் காலடி எடுத்து வைப்பதையும் நாம் நினைவு கூருகின்றோம். .



### 1844 ஐப்பசித்திங்கள் 17ம் நாள் திருச்சிலுவைக் கன்னியர் சபையானது ஆசிரியப் பணிக்கென அடித்தளமிடப்பட்டது



பிரான்சியப் புரட்சியை அடுத்து ஏற்பட்ட துன்பகரமான அல்லது வேதனைக்குரிய சூழ்நிலையிலே புதிய ஒரு துறவற சபை அடித்தளமிடுவதற்கு நல்ல ஒரு உறுதியான நிலத்தைப் பெற்றுத் தந்தது என்று கூறினால் அது மிகையாகாது. அக்கால கட்டத்தில் நம்பிக்கையும், நீதியும், அறமும், ஒழுக்கமும் சமுதாயத்தில் கேள்விக்குரிய விடயங்களாக காணப்பட்டன. சுவிற்ஸ்சர்லாந்தில் கத்தோலிக்க திருஅவையானது பல இடர்களைச் சந்தித்தது. இப்படியான சூழ்நிலையிலே தூரநோக்குடன் சிந்தித்த கப்புச்சின் சபையைச் சேர்ந்த அருட்தந்தை தியோடோசியஸ் அவர்கள், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்பினார். மக்களுக்கு கல்வியும் உருவாக்கமும் அவசியம் என்பதைப் புரிந்து கொண்டார். அது மட்டுமன்றி, "இன்றைய யுவதிகள் நாளைய இல்லத்தரசிகள்" அவர்களே தான் குடும்பப் பொறுப்புக்களைத் தம் தோள்களில் தாங்கப் போகின்றார்கள் என்பதையும் உணர்ந்து கொண்டார். இளம் யுவதிகளுக்கு சரியான வழிகாட்டல் வழங்கப்பட்டால் எதிர்கால சமுதாயத்தில் நம்பிக்கையையும் ஒழுக்கத்தையும் கொண்டு வர முடியும் என்பதில் அவருக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது.



இதனை மனதிற் கொண்டவராய், மூன்று இளம் யுவதிகளை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு வாழ்வின் பெறுமதிகளையும், அறத்துடன் கூடிய ஒழுக்கத்தையும் தனது திட்டத்திற்கேற்ப வழங்கி அவர்களை ஊக்கப்படுத்தினார். அவர்களை அர்ப்பணிப்புள்ள துறவிகளாக உருவாக்கிய அதே வேளை கல்வி புகட்டும் ஆசிரியர்களாகவும் உருமாற்றினார். 1844 ஐப்பசி 16ம் திகதி அருட்சகோதரிகளான **பேர்னாடா ஹெய்ம்காட்னர், பெலிசியானா கிராமர், கொர்னேலியா** ஆகியோர் தமது முதலாவது அர்ப்பண வாக்குறுதியை அளித்தனர். அவ்வேளையில் அருட்தந்தை தியோடோசியஸ் "உலகம் தான் உங்கள் துறவறமடம். மௌன அறைகளையும் மடங்களையும் நீங்கள் உங்கள் இதயங்களில் கண்டு பிடித்துக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் நற்செய்தியாக மாறுவது தான் உங்கள் மகிழ்ச்சி. நற்செய்தியின் படி வாழுங்கள். உங்களுடைய இலக்கு கிறிஸ்தவ யுவதிகளுக்கு ஸஸகல்வியினைப் புகட்டுவதாகும். இவ்விலக்கு நீங்கள் செல்லும் எல்லா இடங்களிலும் நிறைவேற வேண்டும்". எனவே அடுத்த நாள் மூவரும் மென்சிங்கனுக்குச் சென்று இளம் பெண்களுக்கு தங்கள் கல்விப் பணியினை ஆரம்பித்தார்கள். அப்பொழுது அவர்கள் கல்வி கற்பிக்கும் திருச்சிலுவைக் கன்னியர் என்று அழைக்கப்பட்டனர்.

### 1906இல் ஆசிரியப் பணியினைச் செய்த அருட்சகோதரிகள் இந்தியாவில் தாதியராக மாறினர்

ஆயர் ALOIS BENZINGER (தென்னிந்திய குயிலோன் மறை மாவட்ட ஆயர்) அவர்கள் கல்வி கற்பிக்கும் திருச்சிலுவைக் கன்னியர்களை தாதியர்கள் அல்ல என்று அறிந்தும் தாதிப்பணிக்காக இந்தியாவிற்கு அழைத்தார். "அர்ப்பணிப்புடன் கூடிய அறிவு டிப்ளோமாவிலும் சிறந்தது" என்று அவர் நம்பினார்., அருட்தந்தை தியோடோசியஸ் எங்கும் எப்போதும் எத்தேவையிலும் முன்னிற்கும் கன்னியர்களாகத் தமது சபையை நிறுவினார். எமது அருட்சகோதரிகள் தாதிச் சேவையை குயிலோன், திருவனந்தபுரம் ஆகிய இரண்டு மாவட்ட அரசாங்க வைத்தியசாலைகளில் பொறுப்பெடுத்து அதனை நிரூபித்தார்கள்.

### 1930 - வணக்கத்துக்குரிய ஆயர் கியோமர் அவர்களால் தாதிய அருட்சகோதரிகள் ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலைக்கு அழைக்கப்பட்டனர்.

1924ம் ஆண்டு வணக்கத்துக்குரிய எம் யாழ் ஆயர் யோன் அல்பிறட் கியோமர் அவர்கள் தென் இந்தியாவுக்கு சென்ற போது அங்கு திருச்சிலுவை அருட்சகோதரிகளின் தன்னலமற்ற அர்ப்பணிப்புள்ள சுகநலப்பணியினை கண்டு அதன் மூலம் உந்தப்பட்டு இத்தகைய சேவை எம் நாட்டின் யாழ் பகுதிக்கும் தேவையென அன்றைய அரசிடம் வேண்டுகோள் விடுத்த போது அது அரசின் காதில் விழுந்ததாக தெரியவில்லை. அவரது ஐந்து வருட அயராத உழைப்பின் பின் தனது செயலாளர் அருட்பணி சி.எ.பொயுறி O.M.I அவரின் மூலம் அருட்சகோதரிகளிடம் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு சிறிய அரச வைத்தியசாலையில் பணியாற்ற முடியுமா? ஏன வினவும்படி கூறினார். தொடர்ந்து செயலாளர் அவர்கள் எழுதிய கடிதத்தில் "இது ஊர்காவற்துறையில் புதிதாக கட்டப்பட்ட ஆதார வைத்தியசாலை. இங்கு பெண், ஆண் நோயாளர் விடுதிகளாக 46 கட்டில்கள் காணப்படுகின்றன. வைத்தியசாலையை பொறுப்பெடுக்கும் மூன்று அருட்சகோதரிகள் தங்குவதற்குரிய ஒரு சிறிய இல்லம் அமைக்கப்பட்டு உள்ளதாகவும் அரசாங்கத்தினால் ஒரு வருட ஊதியமாக தலைமை அருட்சகோதரிக்கு 1500ரூபாவும் மற்றைய இரு அருட்சகோதரிகளுக்கு தலா 1200ரூபாவும் வழங்கப்படுமெனவும் அவர்களின் சேவையின் அடிப்படையில் அதிகரிக்கப்படும" எனவும் குறிப்பிட்டிருந்தார்.

ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலையில் பயிற்சிப் பெற்ற அருட்சகோதரிகள் பணியாற்றலாம் என அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனுமதி உறுதி 13.6..1930ல் (கடி இல. M230/29) அளிக்கப்பட்டது. புதிய வைத்தியசாலை ஆனி மாதம் 21ம் திகதி திறக்கப்பட இருப்பதால் அத்திகதிக்குப்பின் கடமையில் இணையலாம் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.



26-7-1930 பி.ப. 3 மணிக்கு அருட்சகோதரிகள் பெனடிற்ரா ஸ்ரொக்கர் ஒத்மா குறுன்ரர் மரியா கரோலா (12-12-1931 இறந்த அவர் ஊர்காவற்துறை சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டார்) ஆகிய இம் மூன்று அருட்சகோதரிகளும் தம் தலைமைச் சகோதரி லியோனியுடன் ஊர்காவற்துறை படங்கு துறையை வந்தடைந்தபோது MOICயாக இருந்த வைத்தியர் கதிரவேலு புனித யோசப் அருட்சகோதரர்கள், திருக்குடும்ப அருட்சகோதரிகள், பாடசாலை மாணவர்கள், ஊர்மக்கள், அருட்தந்தை கில்லறி ஆகியோர் இணைந்து ஆலய மணியோசையுடன் வரவேற்று புனித யாகப்பர் ஆலயத்திற்கு அழைத்து சென்றனர்.

இதனைத்தொடந்து அருட்சகோதரிகள் தமது தாதியப் பணியினை ஊர்காவற்துறை ஆதார வைத்தியசாலையில் ஆரம்பித்து தொடர்ந்து 32 வருடங்கள் (3-5 மிசனறி அருட்சகோதரிகள்) பணியாற்றினர்.

### 1934 கொழும்புத்துறையில் முதியோர் இல்லம்

அருட்சகோதரிகள் ஊர்காவற்துறையை வந்தடைந்த குறுகிய காலத்தினுள் அரசிற்கும் ஆயர் கியோமர் அவர்களிற்கும் இடையே ஏற்பட்ட பேச்சு வார்த்தையின் அடிப்படையில் மூன்று திருச்சிலுவை அருட்சகோதரிகள் கொழும்புத்துறையில் தயார் நிலையில் இருந்த கட்டடத்தில் இருந்த 40 முதியோரை பராமரிக்கவென வருகை தந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அரசினால் ஒரு வருடத்திற்கு 240ரூபா வழங்கப்பட்டது. ஆனால் திடீரென 80 பேராக அதிகரித்தனர். முதியோர் பராமரிப்பு என்பது வீட்டு பணிகள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாய் இருந்தது. இதனைத் தவிர வெளிநோயாளர்களையும் பராமரித்து வந்தனர்.

யாழ் மறைமாவட்டத்திற்குரிய இவ்வில்லம் இன்று வரை திருச்சிலுவை அருட்சகோதரிகளால் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகின்றது.

### 1938 யாழ் அரசாங்க பொது வைத்தியசாலையில் தாதிய அருட்சகோதரிகள்

அருட்சகோதரிகள் ஊர்கரவற்துறை வைத்தியசாலையில் சேவையாற்ற ஆரம்பித்ததிலிருந்து யாழ்ப்பாணத்து மக்கள் இவ்வருட்சகோதரிகளை தாமது யாழ் அரசாங்க வைத்தியசாலையிலும் பணியாற்ற வேண்டுமென வேண்டிக்கொண்டிருந்தார்கள். எனவே எட்டு வருடங்களின் பின் எதிர்பாராத விதத்தில் ஒரு சாத்திய நிலை உருவாகியது. பயிற்சியும் நல் அனுபவங்களும் நிறைந்த ஏழு அருட்சகோதரிகள் 1938 ஆவணி 10 இல் வைத்தியசாலையின் வேலைத்திட்டத்தினை பொறுப்பேற்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

இவ் வேண்டுகோளிற்கு இணங்க ஏழு அருட்சகோதரிகளும் வைத்தியசாலையில் தமக்கு பணிக்கப்பட்ட பொறுப்புக்களை ஏற்க சென்ற வேளையில் அவர்களை வைத்தியர் விக்கிரமசிங்க அவர்களும், அவருடைய குழுவினரும் அன்புடன் வரவேற்றார்கள். அதேவேளை அருட்சகோதரிகளிடம் உள்ள சான்றிதழ்கள் சத்திரசிகிச்சை கூடத்தையும், மகப்பேற்று விடுதியையும் பொறுப்பேற்க தகைமையானதா என ஆராய்ந்தார்கள்.

ஒவ்வொரு அருட்சகோதரிக்கும் ஒன்று அல்லது இரண்டு விடுதிகள் பொறுப்பாக கொடுக்கப்பட்டன. அதேவேளை அருட்சகோதரி அலோசியா அவர்களிற்கு வைத்தியசாலையின் முழு நிர்வாகப் பொறுப்பும் அளிக்கப்பட்டது. ஆனால் அருட்சகோதரிகளுக்கு மக்களுடன் உரையாடுவதற்கு அவர்களின் மொழி சற்று பிரச்சினையாக இருந்தது. இதேவேளை அருட்சகோதரி அன்ரனி அவர்கட்கு சிறிதளவு தமிழ் மொழி அனுபவம் இருந்தமையால் இரவு சேவையினை ஆரம்பித்தார்.

தொடர்ச்சியாக யாழ் அரசாங்க வைத்தியசாலையில் பணியாற்றும் திருச்சிலுவை அருட்கோதரிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. 1951 தொடக்கம் 1962 வரை 19 அருட்சகோதரிகள் பணியாற்றினர்.

தொடரும்.................

**நன்றி - அருட்சகோதரி றொபினா**
**திருச்சிலுவைக் கன்னியர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித லூக்கா நற்செய்தி அதி 22 - 24 வரை

❖எல்லாரும் பங்கு பற்றலாம்
❖போட்டோப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
❖ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் இருப்பின் வெற்றியாளர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

1ம் பரிசு 500/- 2ம் பரிசு 300/- 3ம் பரிசு 200/-

01. உயிர்த்த இயேசு சீடர்களை விட்டுப் பிரிந்து விண்ணேற்றம் அடைந்தார். இந் நிகழ்ச்சி நடைபெற்ற ஊர் எது?

02. இயேசு உருக்கமாய் இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்த போது அவருக்கு நடந்தது என்ன?

03. பேதுரு மனம் நொந்து அழுததேன்?

04. 'பரபா' என்பவன் யார்?

05. பகைவராய் இருந்த ஏரோதும், பிலாத்துவும் யாரால் நண்பர்களாயினர்?

06. உயிர்த்த இயேசு, எம்மாவூ ஊருக்குச் சென்று கொண்டிருந்த இரு சீடர்களுடன் தங்கியிருந்து, எச் செயலைச் செய்தபோது, அவர்கள் கண்கள் திறக்கப்பட்டன?

07. உயிர்த்த இயேசு நானே தான் என்பதை சீடர்களுக்கு எவ்விதம் வெளிப்படுத்தினார்?

08. 'எருசலேமில் தங்கியிருப்பவர்களுள் உமக்கு மட்டும் தான் இந்நாள்களில் நிகழ்ந்தவைதெரியாதோ' என்று யார் யாரிடம் கூறியது?

09. எருசலேமிலிருந்து எம்மாவூ எத்தனை கிலோமீற்றர் தூரம்?

10. இயேசு சிலுவையில் உயிர் துறந்ததைப் பார்த்துக் கொண்டிருந்த நூற்றுவர்த் தலைவர் கூறியது என்ன?

11. அரிமத்தியா ஊரைச் சேர்ந்த யோசேப்பு என்பவர் யார்? அவர் எப்படிப்பட்டவர்?

12. வழிநெடுகிலும் நீங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டிருப்பது என்ன? என யார் யாரிடம் வினவியது?

13.இயேசு சீடர்களுக்கு ஆசி வழங்கிக் கொண்டிருக்கும் போதே எங்கு சென்றார்?

14. இதோ கோதுமையைப் போல் உங்களைப் புடைக்கச் சாத்தான் அனுமதி கேட்டிருக்கிறான், என்று யார் யாருக்குக் கூறியது?

15. இயேசு கல்லறையில் இல்லாததை திருத்தூதர்களிடம் கூறியவர்கள் யார்?

பெயர் : ..........
பங்கு : ..........
முகவரி: ..........

முடிவுத்திகதி : 15. 11. 2019

# ஒளிமயமாகவே..........

அருட்பணி. N.C. அருள்வரதன்

இதோ கவிதை வரிகள் ..........
சரியாக வடிவமையுங்கள்

❖ உண்மையில் நம் வாழ்வு ஒளிமயமாகுமே
❖ நன்மைகளை நாம் தேடித் தொடரும்போது
❖ தீமைகளை வாழ்விலே தொடரவிடாமல்
❖ செயல்களும் பாதகமாய் அமையுமே
❖ உள்ளங்கள் நிறையும் போது
❖ உயர்வான சிந்தனைகளால்
❖ நம் உள்ளத்தை அலங்கரிக்கவே
❖ நிறைவான விளைவுகளே
❖ நாம் காண்போம் வாழ்வினிலே மாறாக
❖ வன்முறைகள் பகைமை உணர்வுகளால்

இப்போது கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்
எல்லாரும் சரியாக வடிவமைத்தால்
குலுக்கல் மூலம் தெரிவு இடம்பெறும்

1ம் இடம் 500/-
2ம் இடம் 300/-
3ம் இடம் 200/-
முடிவுத்திகதி 15.11.2019

# ஹாய் குட்டீஸ்
# திருவிவிலிய புதிர் போட்டி எண் : 41
# எஸ்தர் 1 - 5 அதிகாரங்கள்

01. அரசி எஸ்தர் ஆயத்தம் செய்த விருந்திற்கு மன்னர் தன்னுடன் யாரை அழைத்துச் சென்றார்?

02. சூசான் அரண்மனையில் வாழ்ந்த யூதர் யார்?

03. அகஸ்வேர் என்பவர் யார்?

04. மொர்த்தக்காயை அழிக்க ஆமான் தீட்டிய திட்டம் என்ன?

05.மொர்த்தக்காய் என்பவர் யார்?

06. மன்னர் ஆமானுக்கு அளித்தது யாது?

07. சதிசெய்யப்பட்ட மன்னனை யூத இனத்தவரான மொர்த்தக்காய் காப்பாற்றினார். இந் நிகழ்ச்சி மன்னன் முன்னிலையில் குறிப்பேட்டில் எழுதப்பட்டது. அம்மன்னனின் பெயர் யாது?

08. அகஸ்வேர் மன்னனின் சொல்லுக்கு இணங்க மறுத்து தண்டனை பெற்ற அரசி யார்?

09. ஆமான் முன் மண்டியிட்டு வணங்காதவர் யார்?

10. அகஸ்வேரின் தலைநகர் எது?

பெயர் : ..........
பங்கு : ..........
முகவரி: ..........


முடிவுத்திகதி : 15. 11. 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ் ஆண்டுக்கான விஷேட போட்டி

புனித லூக்கா நற்செய்தி அதிகாரம் 10 - 12 வரை

### போட்டி முடிவுகள்



பங்குபற்றியவர்கள் : 84 பேர்

மிகச்சரியாக விடையளித்தோர் : 06 பேர்

பரிசுக்குரியவர்கள்

1ம் பரிசு 500/-
கே. கிறிஸ் யஸ்வின்
இல 55/1, அந்தோனியார் வீதி,
செல்வநாயகபுரம்

2ம் பரிசு 300/-
செல்வி றொவீனா றொஜிலியா
இல : 52 பற்றிமா வீதி
திருகோணமலை

3ம் பரிசு 200/-
திரு. ரி. தனராஜா
இல 427, அன்புவழிபுரம்
திருகோணமலை

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 34
## 01தெசலோனிக்கர் அதி 01-05 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பெ | | | | | | | ■ | ■ | மீ |
| | | | | | | | | தூ | |
| இ | | | | | | | ■ | | |
| | ■ | ■ | த | | | | | | |
| | | | | | | ஆ | ■ | | |
| | ■ | இ | | | | | ■ | | |
| | ■ | ■ | | | | | | எ | |
| | தி | | | | | | | | ■ |
| ■ | உ | | | | | | | | |
| ■ | | | | | | | | | அ |

01. இ......வனி........ம்
02. இறை......ர்த்.......யை
03. திருத்.........த........கள்
04. இடை.........டாது
05. எதி........நோ........கி
06. த......ர்..........து
07. பெ..........மகிழ்........சி
08. ஆ.......வ........டன்
09. உயி........த்தெ.......ந்..........ர்
10. எ.........கா........ம்
11. அ.........வுத்......ளிவோ.....ம்
12. மீ.......பு அ.......யவே
13. தூய்......யா....கு வா......க

முடிவுத்திகதி 15.11.2019

## சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி புனித லூக்கா

பங்குபற்றியவர்கள் : 35சிறார்கள்

பரிசுக்குரியவர்கள்



1ம் பரிசு 500/-
ஜெ. லிவோஷன் லூக்
இல 74/1A, சாண்டிகோ,
திருகோணமலை

2ம் பரிசு 300/-
ஆர். ஜனக்சன்
மாங்காயூற்று,
கன்னியா

3ம் பரிசு 200/-
ஆர். ஹரனி
பீலியடி,
கன்னியா

**பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும்**

## மறைக்கல்வி கற்போம்



'கடவுள் நம் சார்பில் இருக்கும் போது நமக்கு எதிராய் இருப்பவர் யார்' (உரோமை 8:31)

உன்னுடைய பிரச்சினைகள் அனைத்தும் உன்னைத் தாக்கும் ஒரு படைபோல உனக்கு எதிராக வருவதாக கற்பனை செய்து பார். இந்த எதிரிகளையெல்லாம் காணும்போது உன் மனதிலே ஏமாற்றம், கோபம், எதிர்ப்பு, பலவீனம் ஆகிய உணர்வுகள் எழுகின்றன. அப்போது 'இவைகளுக்கு நான் என்ன பதில் சொல்வேன் என்று கேட்டுப் பார். நீ கொடுக்கும் பதில் 'கடவுள் எனக்காக இருக்கும் போது யார் என்னை ஒடுக்க முடியும்'.

ஒரு நிமிடம் மௌனமாயிருந்து, வரும் வசனத்தை உன்னிலே சொல்லிக் கொள். 'கடவுள் என்னோடு இருக்கிறார். கடவுள் எனக்காக இருக்கிறார். என் எதிரிகளையெல்லாம் விட கடவுள் மிகப் பெரியவர்.

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போது உன் எதிரிகளெல்லாம் பின்தங்கிப் போவதாக கற்பனை செய்து பார். மீண்டும் திருவசனம் உன்னில் நிலைக்கும்படி மனதிற்குள் சொல். 'கடவுள் எனக்காக இருக்கும்போது எனக்கு எதிராக இருப்பவர் யார்?

இவ்விதம் மீண்டும் மீண்டும் இவ்வசனங்கள் உன்னில் எதிரொலிக்கும் போது அதன் பயனாக இறைபிரசன்னமும் வல்லமையான வெற்றி உணர்வும் பிறக்கும்.

**நன்றி - உன்னோடு கடவுள்**

## சிறுவர்களுக்கான போட்டி
## படத்திலுள்ள 06 வித்தியாசங்களை கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்
## சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள்

01



02



- பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 இற்கு மாத்திரம் நிறம் தீட்டி வித்தியாசங்களை கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2, 3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ம் பரிசு - 500/= 2ம் பரிசு - 300/= 3ம் பரிசு - 200/=

பெயர் ......................................................

முகவரி ......................................................

பங்கு ......................................................

தரம் ......................................................

முடிவுத் திகதி 15.11.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு நற்செய்தி அறிவிப்பு மாதம் - 2019



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2019 ஐப்பசி மாதத்தை அதிவிசேட மறைபரப்பு மாதமாக பிரகடனப்படுத்தியுள்ளார். இம் மாதத்தில்,

- ✠ இறைவார்த்தை, திவ்விய நற்கருணை, செபம் ஆகியவற்றின் மூலம திருஅவையில் உயிருடன் இருக்கும் இயேசு கிறிஸ்துவுடன் ஆழமான உறவை ஏற்படுத்திக் கொள்ள...
- ✠ மறைபரப்பு பணிக்கு சாட்சிகளாக இருக்கும் புனிதர்கள், மறைசாட்சிகளிடமிருந்து பலத்தை பெற்றுக் கொள்ள.....
- ✠ திருஅவையின் பணிக்காக நம்மை தயார்படுத்திக் கொள்ள...
- ✠ திருச்சைபயின் பணி செயற்பாடு மற்றும் சமுதாயத்தில் உள்ள ஏழை மக்களுக்கு எம் ஆதரவை கொடுக்க....

திருத்தந்தை அவர்கள் அழைப்பு விடுத்திருக்கிறார். இதை சிறுவர்கள் மத்தியில் சேர்ப்பதற்கு ஆகஸ்ட் மாதம் 28, 29ம் திகதிகளில் திருத்தந்தையின் மறைபரப்பு சபைகளின் திருகோணமலை மறைமாவட்ட இயக்குனர் தந்தை X. I. றஜீவன் அடிகளாரின் ஒழுங்கமைப்பில் அன்பின் கன்னியர் துறவற சபையினரின் அனுசரணையுடன் பல நிகழ்வுகள் லொயோலா கல்லூரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுகளில் அனைத்துப் பங்குகளிலிருந்தும் 126 சிறார்கள் பங்கு பற்றியிருந்தனர். இந்நிகழ்வுகளில் அருட்பணி.X.I. றஜீவன், அருட்பணி.T.கிங்ஸ்லி றொபட், அருட்பணி. மதுராங்கள் குரூஸ், அருட்பணி. D. அன்ரூ ஸ்டீபன், அருட்பணி அன்ரனி றொபட். SJ, அருட்சகோதரி. ஜீன் பப்டிஸ்ட் ஆகியோர் சிறார்களை வழிநடத்தினர். இந் நிகழ்வுகளில் பங்குபற்றிய அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு இந் நிகழ்விற்கு முழு அனுசரனை வழங்கிய அன்பின் கன்னியர் துறவற சபையினருக்கு எமது நன்றிகளை தெரிவித்து இறையாசீர் வேண்டி நிற்கின்றோம்.











இந்நிகழ்வின் இறுதி நாளில் மறைமாநிலத் தந்தை கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை வருகை தந்து நற்கருணை ஆசிர் அளித்து வாழ்த்துக் களையும் தெரிவித்தார். ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் மறைமாநிலத் தந்தைக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்நிகழ்விற்கு சிறார்களை ஒழுங்கமைத்து அனுப்பி வைத்த பங்குத் தந்தையர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.






## பங்குபற்றியோர் பகிர்வில்.....

- ✠ உணவை வீண் விரயம் செய்யக் கூடாது என்பதைக் கற்றுக் கொண்டேன்.
- ✠ எமது சந்தோசத்திற்காக அடுத்தவரை துன்புறுத்தக் கூடாது என்பதைக் கற்றுக் கொண்டேன்.
- ✠ எவ்வாறு செபிக்க வேண்டும் என்பதையும், ஆண்டவருடன் உரையாட நேரத்தை ஒதுக்க வேண்டும் என்பதையும் தெரிந்து கொண்டேன்.
- ✠ தாழ்ச்சி, பொறுமை, சாட்சிய வாழ்வு, பெற்றோரை மதித்தல், ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்பவற்றை கற்றுக் கொண்டோம்.
- ✠ பிறருக்கு உதவ வேண்டும் என்பதை தெரிந்து கொண்டேன்.
- ✠ எல்லோருக்காகவும் ஜெபிக்க வேண்டும் என்பதை அறிந்து கொண்டேன்.
- ✠ திருவிவிலியம் வாசிக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டேன்.
- ✠ இன்று எமக்கு கிடைக்கும் உணவு பலருக்கு கிடைப்பதே இல்லை. அதை உணர்ந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தி உணவை வீணாக்காமல் உண்ண வேண்டும் என்பதைக் கற்றுக் கொண்டேன்.
- ✠ தேவ நற்கருணையின் மகத்துவத்தை புரிந்து கொண்டேன்.
- ✠ எம் சமூகத்தில் உள்ள ஏழை எளியவர்களை அன்பு செய்ய வேண்டும், அவர்களை மதிக்க வேண்டும் என்பதை உணர்ந்தேன்.
- ✠ புனித அன்னைத் தெரேசா பற்றியும் அவரது வாழ்க்கை முறை பற்றியும் தெரிந்து கொண்டு அதன்படி வாழ கற்றுக் கொண்டேன்.
- ✠ நாம் செபிக்கா விட்டாலும் செபிப்பவர்களை தடுக்க கூடாது என்பதை உணர்ந்து கொண்டேன்.
- ✠ குழுமுயற்சி, ஒற்றுமை, விட்டுக் கொடுப்பு போன்ற பண்புகளை கற்றுக் கொண்டேன்.

**தகவல் : இயக்குநர், திருப்பீட மறைபரப்பு சபைகள் பணியகம், திருகோணமலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆண்டவரின் விருப்பத்திற்கு ஏற்றவாறு பணிசெய்வோர் ஏற்றுக்கொள்ளப்படுவார். (சீ. ஞா 35:16)**